விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 213 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை (20.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

GTV Express Parcel.lk
மகாராஜா பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
அவுஸ்திரேலியா Rs.1900/= இங்கிலாந்து Rs.1400/= ஜேர்மனி Rs.1900/=
(1335)
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
www.gtve.com | 011 4 654 444

## கொலையாளிகள் தப்ப முடியாது தண்டனை உறுதி - அமைச்சர் பிமல்



(கொழும்பு)

கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்போம். அவர்கள் ஒரு போதும் தப்ப முடியாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல உண்மைகள் வெளிவந்துள்ளன

### விரைவில் கைதுகள் இடம்பெறும் - அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளிவராத பல உண்மைகள் விசாரணைகளில் வெளிவந்துள்ளன. விரைவில் பலர் கைது செய்யப்படலாம் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எந்த மட்டத்தில் உள்ளன என்று ஊடகவியலாளர்கள் அமைச்சர் நளிந்த

23ஆம் பக்கம் பார்க்க

# யுத்தம் நடந்த மண்ணில் புதைகுழிகள் இருக்கும்

### செம்மணி அகழ்வு தேவையற்றது - உதய கம்மன்பில



(கொழும்பு)

யுத்தம் நடந்த மண்ணில் எங்கு தோண்டினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி மேற்கொள்வது தேவையற்றது என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## யாழைச் சேர்ந்த யுவதி கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 26 வயதான இளம் யுவதி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண்

23ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் விபத்து 3 பேர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி, உடுதும்பர - மீமுரே பகுதியில் வான் ஒன்றுபள்ளத்தில்வீழ்ந்துவிபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில்

23ஆம் பக்கம் பார்க்க


- ஆலடி மாநாடு
- ஆச்சி அறிவுரை
- கவிதைக் கலசம்
- வியாசர் பதில்கள்
- அரசியல் கட்டுரைகள்

இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம்
உள்ளே...


## அரசை வீழ்த்தக்கூடிய வலுவான எதிரணி இல்லை

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

அநுர அரசாங்கத்தை வீழ்த்தக்கூடிய வலுவான எதிரணி தற்போது இல்லை என அமைச்

23ஆம் பக்கம் பார்க்க

புதிய கல்வி மறுசீரமைப்பில்

## வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைப்பு

(கொழும்பு)

வகுப்பறைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை 25-30 ஆகக் குறைப்பது புதிய கல்வி மறுசீரமைப்பின் முக்கிய இலக்காகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தென்

23ஆம் பக்கம் பார்க்க

ஆதி முதல் அறிந்தவர்




40 வருடங்கள் உங்கள் வாழ்வில் பணப்பரிவர்த்தனைகளோடு இணைந்திருக்கும் நாம்
நீங்கள் ஆதி முதல் அறிந்த - உங்களை ஆதி முதல் அறிந்த RDB வங்கி ஆதி முதல் அறிந்தவர்

RDB தொழில்முனைவோருக்கான வர்த்தகக் கண்காட்சி ஜூலை 25, 26, 27 ஆகிய மூன்று தினங்களில் BMICH வளாகத்தில் மு.ப 10.00 மணியிலிருந்து பி.ப 8.00 மணி வரை நடைபெறும். நுழைவு இலவசம்.

இலத்திரனியல் ஊடக அனுசரணை

RDB வங்கி
Empowering Sri Lankans
www.rdb.lk | HOTLINE 0112 42 52 62
பிரதேச அபிவிருத்தி வங்கி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையிலான சான்றளிக்கப்பட்ட விஷேட வங்கி | "BBB+" Stable (LRA)
(213)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

3 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலை செய்வதற்கு வேலையாள் (பெண்) தேவை. (4849)

**076 645 9238**

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பலாலி வீதி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் விவசாயப்பண்ணை வீதியில் உள்ள வீட்டின் முதலாம் மாடியான மூன்று அறைகளுடனான வீடு மாதாந்த வாடகைக்கு உண்டு. (4846)

தொடர்பு : **077 378 7380**


## சிறந்த நிலம் விற்பனைக்கு

- மீசாலை கிழக்கு - வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு - வீட்டுடன் தென்னங்காணி
- கச்சாய் (புங்கடி) - வயல், தென்னங்காணி

விலை பேசத்தக்கது. (212)

**077 654 4540**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு


எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு 21.06.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் நாகமுத்து நவரத்தினம்

(தொழிலதிபர் - நவரத்தினம் தச்சுத் தொழிலகம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (22.07.2025) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நவரத்தினம் தச்சுத் தொழிலகம்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (4844)

இங்ஙனம்
குடும்பத்தினர்

## இணைய வழி வணிக செயல்பாட்டுப் பணியாளர் பதவி வெற்றிடம் (Online Business Operator)

நிறுவனம் : VIMIX PVT LTD (UK)

இடம் : மானிப்பாய், யாழ்ப்பாணம்

தகைமைகள் :

1. Degree / HNDIT:- (Photoshop மற்றும் இணைய சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு)
2. ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சி (speaking and writing)
3. சந்தைப்படுத்தல் தொடர்பான முன் அனுபவம் E- Commerce(Amazon & ebay)

சம்பளம்: ரூபா 45,000/- முதல் ரூபா 65,000/- (தகுதி அடிப்படையில்)

vimixpvtltd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு CVஐ அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு :- **077 070 0362** (1346)

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் ஆட்கள் தேவை.


1. Manager (2 Years experience)
2. Administration
3. Computer Billing + Cashier
4. Sales Assistant
5. Driver - AD Licence
6. Packing - பொதியிடல்
7. part time - 5.00 pm to 10.00pm

- வயது எல்லை 18 - 35
- யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :

**077 419 5209**
**077 419 5218** (4830)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

உ

திருச்சிற்றம்பலம்

## செந்தமிழில் வாழ்வியல் சடங்கு வழிபாடுகள்

தமிழ் என்பது மொழி மட்டுமல்ல பண்பாடு, வாழ்வியல், பழமை, ஆகமம், ஆன்மீகம் என்று தமிழரின் முழுமையான வாழ்க்கையுடன் இரண்டறக்கலந்த உயிர் அது. அவ்வாறான ஆதிப் பண்பாட்டின் அழகிய தமிழ்முறை வாழ்வியல் சடங்குகளை, முன்னர் போலவே தமிழிலே செய்யும் நெறிமுறைகளை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தும் நோக்குடன் சிவப்பணிகளை கடந்த ஐந்து வருடங்களாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் ஆற்றி வருகின்றது.

அந்த வகையில் எம் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புடைய சடங்குகளை செந்தமிழில் செய்ய விரும்புபவர்கள் தென்னாட்டை தொடர்பு கொண்டு நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**செந்தமிழில் வாழ்வியல் சடங்குகள்**

- திருக்குட நன்னீராட்டு பெருவிழா
- புதுமனை புகுவிழா வழிபாடுகள்
- திருமணம்
- ஐங்கரன் வேள்வி வழிபாடுகள்
- பூப்பு மங்கல நன்னீராட்டு
- புனிறு நீக்கல் வழிபாடுகள் ( துடக்குக் கழித்தல்)
- நீத்தார் கடன் வழிபாடுகள் ( ஆண்டுத் துவசம்)

வழிபாடுகள் ஆற்றுபவர் :

செந்தமிழ் வேள்வித் தொண்டர், சிவ பூசைச் செவ்வர், சித்தாந்தப் புலவர் தமிழ் அருட்சுனைஞர், உமையொருகூறன் சிவம் சிவ செ. அப்பு இராமராஜ்

(சேலம் மாவட்டம், தமிழ்நாடு)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,
தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 222 9722 / +94 70 770 1111 (C-3458)

## நாகபூஷணி திருமண சேவை





உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)
**077 138 7596, 071 999 9306** (C-3457)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு





எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி நாகேந்திரன் ருக்மணி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.07.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் அவரது துக்கத்தில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


மாவத்தை ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (4840)

இங்ஙனம் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்த போராட்டங்களால் எந்தப் பலனும் ஏற்படாது!

## விமர்சிக்கும் அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

**எந்தவொரு கோரிக்கையை முன்னிட்டும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப் படுவது மிகப் பெரும் தவறு என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விமர்சித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், வேலைநிறுத்தப் போராட்டங்கள் காரணமாக இழக்கப்படும் 24 மணிநேரமோ அல்லது 48 மணிநேரமோ அதனை ஈடு செய்ய அதன் பின்னரான ஒருவாரம் வரை கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் வீதிக்கு இறங்கி வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் செய்துவிடுவதால் மாத்திரம் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது.

ஒருசில விடயங்கள் தொடர்பில் நாங்கள் அதனை மேற்கொள்ள திறைசேரியுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியிருக்கும்.

அதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கும். எனவே வேலை நிறுத்தம் மேற்கொள்வதால் ஒரு சதத்துக்கும் பிரயோசனம் இல்லை என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (நி)

## நாடு முழுவதும் விசேட சோதனை

(கொழும்பு)

நாடு முழுவதும் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 1,461 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ், 14,000 இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினரைக் கொண்டு இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சோதனை நடவடிக்கையில், குற்றங்களில் நேரடியாக பங்கேற்ற 107 நபர்களும், இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 7 நபர்களும் கைது செய்யப்பட்டதுடன் 46 வாகனங்கள் மற்றும் 51 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சோதனையின் போது, ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்கள் உள்ளிட்ட பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நடந்து சென்ற சிறுவனை மோதித்தள்ளிய கார்

(கொழும்பு)

வீதியால் நடந்து சென்ற சிறுவன் கார் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள துயரச்சம்பவம் இடம் பெற்றுள்ளது

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.


குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், உறவினரின் வீட்டுக்கு வீதியால் நடந்து சென்ற சிறுவனைப் பின்னால் வந்த கார் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மேற்படி சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## மரண அறிவித்தல்

சிவபூமியில் 01 . 11 . 1935



சிவபுரத்தில் 17 . 07 . 2025

### சிவத்திரு.பொன்னம்பலம் நாகமணி

யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஸ்கந்தபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும், கனடா ஸ்கார்பரோவை (scarborough) வசிப்பிடமாகவும் கொண்ட சிவத்திரு பொன்னம்பலம் நாகமணி அவர்கள் 17.07.2025 வியாழக்கிழமை அன்று சிவப்பரம்பொருளின் பாதங்களைச் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி-குட்டி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை-அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அருள்மதி, வேல்மதி, மாலினி, நிமலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகநாதன், பாலேஷ்வரதன் லெனின், மனோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, நாகேந்திரம், தங்கம்மா (லட்சுமி) மற்றும் முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்திகா, கீர்த்தனா, ஏரன், அஞ்சனா, ஜோதின், அவனி, வேதன், எழிலி, பகவன், வளவன், கனியன், அமீரா, கிருசாந்தன், பிரைன் ஆகியோரின் அன்புப் பேரனும், செரினா அவர்களின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளை அடைந்து மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வினை பெற்றிட வேண்டி எல்லாம் வல்ல தென்னாடுடைய சிவனிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

பார்வைக்கு : Saturday, 19 Jul 2025 5:00 PM - 9:00 PM at Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada. Sunday, 20 Jul 2025 12:00 PM - 1:00 PM at Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை : Sunday, 20 Jul 2025 1:00 PM - 3:00 PM at Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave,Markham, ON L3R 5G1, Canada.

தகனம் : Sunday, 20 Jul 2025 3:30 PM - 4:00 PM at North Toronto Crematorium 2 Stalwart Industrial Dr, Gormley, ON L0H 1G0, Canada.

தொடர்புகளுக்கு: புவனேஸ்வரி பொன்னம்பலம் (மனைவி) (+14379795530)

தகவல்: குடும்பத்தினர்

(c-3453)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 05 . 1946



இறைவன் அடியில் 12 . 07 . 2025

அமரர்.

### இரத்தினேஸ்வரி சுரேந்திரதாஸ்

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அமரர் இரத்தினேஸ்வரி-சுரேந்திரதாஸ் (ராதா) அவர்கள் 12.07.2025 சனிக்கிழமையன்று அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் சுரேந்திரதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், குமரன் அவர்களின் அன்புத் தாயாரும், சோஹி (Zoe) அவர்களின் அன்பு மாமியாரும், லானா (Lahna) வின் பேர்த்தியும், காலஞ்சென்ற விவேகானந்தன்-ராஜரத்தினம் அம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சபாரத்தினம் கண்மணி அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆழிக்குமரன் ஆனந்தன், ரஞ்சிதமணி (USA), கலாநிதி நித்தியானந்தன் (ரஞ்சன் UK), காலஞ்சென்ற ரங்கமணி, ரூபமணி (ரூபா) மற்றும் சிவானந்தன் (பாபு-Germany), ரவீந்திர ஆனந்தன் (ரவி UK), கருணானந்தன் (கண்ணன் UK), கோகிலா (Canada) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சசிந்திரகுமார் (Sasi), ஜெயதாஸ் (ரவி) மற்றும் ஸ்ரீமுருகன் (ஸ்ரீ UK) சசிகலாதேவி (கலா-இலங்கை), செல்வராணி (Canada) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.07.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(c-3454)

தொடர்புகளுக்கு

சுரேஸ் (கணவர்) 0044 7817491531
பாபு (சகோதரர்) 0049 1625824315
குமரன் (மகன்) 0044 7762662225
ரவி (சகோதரர்) 0044 7884008311
[illegible]) 0044 7894730739
கண்ணன் (சகோதரர்) 0044 7757235488
[illegible] (சகோதரர்) 0044 1642787120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.47 கோடி வென்றவருக்கு

# காசோலை வழங்கி வைத்தது தேசிய லொத்தர் சபை




இலங்கை லொத்தர் வரலாற்றில் அதிகூடிய பரிசுத் தொகையான 47 கோடி ரூபாய் வென்ற நபருக்கான காசோலை நடந்த வியாழக்கிழமை தேசிய லொத்தர் சபையினால் வழங்கி வைக்கப்பட்டது.

காசோலையை வழங்கும் நிகழ்வில் கொழும்பு முதல்வர் திருமதி. விராய் கெலீ பல்தசார், பிரதி முதல்வர் ஹேமந்த வீரக்கோன், தேசிய லொத்தர் சபையின் தலைவர் எம்.டி.சி.ஏ பெரேரா மற்றும் பொது முகாமையாளர் ஏ.எம்.ஆரிஃப் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கொழும்பு மாநகர சபையிலே நடைபெற்றது. (நி)




தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் ***(NAITA)*** பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர். திருமுருகன் தலைமையில் கடந்த 17 ஆம் திகதி பி. ப 3 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.





டேவிட் பீரிஸ் குழுமத்தினால் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி கணனிகள் கடந்த புதன்கிழமை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் டேவிட் பீரீஸ் குழுமத்தின் தலை வரும் நிர்வாக இயக்குனருமான ரோஹன திஸா நாயக்க, சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஜெயந்த ரத்நாயக்க, அசாட்லைன் பினாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அசாம் நிசங்க பாடசாலை அதிபர், ஆசிரியர் மாணவர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: சிவசாந்தன்)




உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவமுதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படம்: கஜிந்தன்)



இணுவில் பொது நூலக சிறுவர் திறன் விருத்தி மைய மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வான கடந்த 14 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களின் சிறப்பு நிகழ்வுகளாக ஆங்கிலத்திலான பாடல்கள் கவிதை கூறல் கதை கூறல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.



கிளிநொச்சி தருமபுரம் இல 1 அ.த.க பாடசாலையில் பாடசாலை மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த 18 ஆம் திகதி பாடசாலை முதல்வர் பரமநாதன் தவனேசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)



தாய் நாட்டிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில், இராணுவத்தின் 542 ஆவது காலாட் படை பிரிவு ஏற்பாடு செய்த தேசிய மர நடுகை நிகழ்வு அண்மையில் மன்னார் மடு திருத்தல வளாகத்தில் இடம் பெற்றது.

(படம்:ஜோசப் நயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எமது குடும்பத் தலைவி
அமரர்.திருமதி.

**றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன்**

(ஓய்வு நிலை நவீல்ட் பாடசாலை ஆசிரியை, சிறந்த தையலாளர்)

தோற்றம் 1950.10.12 மறைவு 2024.07.20

காலமெல்லாம் நீங்கா நினைவில் வாடுகின்றேன்.

நீங்கா நினைவில் வாடும்
கணவன் திரு ஜெ.சத்தியேந்திரன்
(ஓய்வு நிலை உதவிப் பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, யாழ்ப்பாணம்)

இல.20, நங்கா லேன்,
பொஸ்கோ பாடசாலை அருகில்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(1339)
T.P. 077 505 6263

## சிங்களவர்களை படுகொலை செய்தது மனிதப் படுகொலை இல்லையா?

### நாட்டுக்கான தேசிய அமைப்பு கேள்வி

(கொழும்பு)

விடுதலை புலிகள் சிங்களவர்களை படுகொலை செய்தது மனித படுகொலை இல்லையா இதற்கு யார் நீதியை பெற்றுக் கொடுப்பது என நாட்டுக்கான தேசிய அமைப்பின் செயலாளர் அசேப எதிரிசிங்க கேள்வி எழுப்பினார்.

பழைய செம்மணி புதைகுழி தற்போது தோண்டப்படுகிறது. சிங்களவர்களின் படுகொலை புதைகுழிகளை யார் அகழ்வது?

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர்கள் மனித படுகொலையாளிகளாகவும் பயங்கரவாதிகள் வீரர்களாகவும் சித்தரிக்கும் நிலை தற்போது காணப்படுகிறது.

ஐ.நா சபை நடுநிலையான வகையில் செயற்பட வேண்டும் என அசேப எதிரிசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் முன்பாக நேற்று முன்தினம் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது. இந்த நாட்டில் இடம்பெற்ற 30 ஆண்டுகால யுத்தத்தால் நாட்டில் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஒட்டுமொத்த மக்களின் மனித உரிமைகளும் மீறப்பட்டன. இவ்வாறான நிலையில் ஒருபகுதியை மாத்திரம் இலக்காகக் கொண்டு அவதானம் செலுத்தப்படுகிறது.

விடுதலை புலிகள் அமைப்பினர் நாடு முழுவதும் மேற்கொண்ட 100 தாக்குதல்களின் படங்களை ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தின் முன்பாக காட்சிப்படுத்தியுள்ளோம்.

விடுதலை புலிகளின் அமைப்பினால் இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவற்றை ஆராய்வதை விடுத்து இலங்கை இராணுவத்தினர் மீதுதான் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகிறது.

இந்த நாட்டில் இன்றும் நாட்டு பற்றுள்ளவர்கள் உள்ளார்கள் போலியான மனித உரிமைகளுக்கு ஐ.நா. சபை அடிபணியக் கூடாது எனத் தெரிவித்தார். (நி)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியை அழைப்பிதழ்



கடந்த 05.07.2025 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவன்

அமரர். **கணபதிப்பிள்ளை சிற்சபேசன்**
(அண்ணாவியார் சேகர்)

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 21.07.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(4847)

இங்ஙனம்-சிற்சபேசன் குடும்பத்தினர்.

காளிகோவிலடி,
நெல்லியடி.

சிவதர்ஷன்-+33758917370
பத்மசீலன்-077 474 1933
விசாகேசன்-077 852 6743


---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**ஐயாமுத்து சிவராசா**

(ஓய்வு பெற்ற கணித ஆசிரியரும் முன்னாள் கருணாலய ஆண்கள் இல்ல முகாமையாளரும்)



அன்பும் அனுபவங்களும்
நிறைந்த உம் நிறைவான
வாழ்வியலை
உங்கள் அன்பின்
கரம் பற்றி நாமும்
தொடர்கிறோம்.

'ஸ்ரீ ரஞ்ஜனி வாசம்'
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(1337)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
**குடும்பத்தினர்**

---

## இராசிபலன்

20.07.2025
ஆடி 04, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 11.26 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 10.44 மணிவரை
சுப நேரம் 9.01-10.31 மணிவரை
இராகுகாலம் 4.31-6.01 மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**வளவன்**

**மேஷம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெருமைகள் வந்து சேர பெருமானை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்**
அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்**
மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**தனுசு**
இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தாய்வழி உறவினர்கள் வழியில் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**நேற்றைய விட இன்று வளர்ந்தோம் என்ற நம்பிக்கை வெற்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. புத்தசாசன மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களம், யாழ்ப் பாண மாவட்ட செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாம ன்றம், யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியன இணைந்து இந்த துறவற நூற்றாண்டு விழாவினை ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கலந்து கொண்டதுடன் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், வைத்திய ரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.ஸ்ரீபவானந்தராஜா, யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், பிரதேச செயலர்கள்,செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்,ஆசிரியர்கள் மாண வர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-104)

# நல்லூரானை தரிசித்தார் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன அங்கு பல வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும் பார்வையிட்டார்.

அதன்படி , நேற்று முன் தினம் முற்பகல் யாழ் . பொது சன நூலகத்திற்குச் சென்ற சபாநாயகர் நூலகத்தினைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் கோட்டைக்குச் சென்று கோட்டை பகுதிகளையும் பார்வையிட்டார்.

இதேவேளை, அவர் நேற்று முன்தினம் மாலை வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ள சபாநாயகர் பல்வேறு இடங்களிற்கும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ( நி-8-33)

# ஆடிப்பூரத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிபூரத் திருவிழாவை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அபிஷேகங்களும், இலட்சார்ச்சனையும், திருமுறைப் பாராயணமும் தீபாராதனையும் நடைபெற்று அம்பிகை வீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் ஆடிப்பூரத் தினத்தன்று மூலஸ்தான அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும் 108 சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும் 1008 சங்காபிஷேகமும் மற்றும் ஏனைய மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் நடைபெறும்.

தொடர்ந்து விசேட பூசை, பூரகர்மா ருதுசாந்தி, தீபாராதனை, திருமுறை பாராயணம், திருவூஞ்சல் என்பன இடம்பெற்று அம்பாள் அழகிய தாமரைப்பூ பீடத்தில் எழுந்தருளி வீதியூலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதென ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (3)


# கேரளாக் கஞ்சா மீட்பு

(தருமபுரம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் நேற்று காலை 9 மணியளவில் பெருந்தொகையான கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

புனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நெல்லியடி விசேட அதிரடிப் படையினரால் விசேட சுற்றிவளைப்பு ஒன்றினை நாகர் கோவில் பகுதி முழுவதும் மேற்கொள்ள பட்டது.

இச் சுற்றி வளைப்பில் 40 பொதிகள் அடங்கிய 81.300 kg



கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரும் தப்பி சென்றுள்ளார்.

மீட்கப்பட்ட கேரளா கஞ்சா மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக் கப்பட்டுள்ளதுடன் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)


# ஞானச்சுடர் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியின் ஆச்சிரமத்தின் சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த இதழான ஞானச்சுடரின் 330 ஆவது மலர் வெளி வந்துவிட்டது.

இம் மலரின் திருச்சாளக்ராமம், திருக்கயிலாயம், மருந்து உன்னிடமே... ஆகிய பல ஆன்மீகத் தகவல்களை உள்ளடக்கியதாக இம் மலர் வெளிவந்திருக்கிறது. (3)

# இன்னொரு அடக்குமுறைச் சட்டம் வேண்டாம் ! யாழில் நேற்று கையெழுத்துப் போராட்டம் !



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது செய்யக் கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாளக் கையெழுத்து போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

சம உரிமை இயக்கம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் யாழ் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை இரத்துச் செய்,காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு, அனைத்து தேசிய இனத்தவருக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசியலமைப்புக்காக போராடுவோம் போன்றவற்றை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (8-33-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 500 | 350 | 400 |
| தக்காளி | 120 | 200 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 200 | 250 |
| கோவா | 300 | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 400 | 350 | 500 | 350 | 400 |
| பூசணி | 100 | 150 | 120 | 100 | 150 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 450 | 600 | 600 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 120 | 200 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 230 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 420 | 700 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 60-100 | 80-100 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 120 | 80-130 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 600 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 300 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 80 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 502
20.07.2025


# செம்மணி மனிதப் புதைகுழியும் சிங்கள மக்களின் புரிதலும்



குருசேத்திரம்
-விதுரன்

"தெரியப்படுத்தல்" என்பது மிகவும் முக்கியமானது. உண்மைகள் உரக்கச் சொல்லப்பட வேண்டும். உண்மைகள் உரக்கச் சொல்லப்படவில்லையாயின், பொய்கள் உண்மைகளை மேலாடிவிடும்.

இந்த அவலமான நிலைக்கு ஆளான இனமாக நம் தமிழினம் இருப்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், 1983 ஜூலைக் கலவரத்தின் போது, தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட செய்திகள் வெளிவருவதில் பலத்த தடைகள் இருந்தன.

அப்போது இருந்த அரச ஊடகங்கள் வன்முறைகளை- கலவரங்களை மறைப்புச் செய்தன.

இதனால் ஜூலைக் கலவரம் பற்றி வடக்குக் கிழக்கில் இருந்த மக்கள் கூட அறிய முடியாமல் போயிற்று.

ஆக, சம்பவங்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும் அப்போது தான் யதார்த்தம் புரியப்படும்.

இதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் கூற முடியும். பேரினவாதம் உச்சமடைந்திருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரங்களை சிங்கள ஊடகங்கள் கட்டவிழ்த்து விட்டன.

தமிழ் மக்கள், சிங்களவர்களின் முதல் தர எதிரிகள் போல அந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

பத்திரிகைகளின் விற்பனைக்காக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசமப் பிரசாரங்கள் இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் காவு கொண்டது.

இருந்தும் அந்தத் துயரச் செய்திகள் சிங்கள மக்களைச் சென்றடையவில்லை.

அதேவேளை உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு சிங்களப் பத்திரிகைகள் தயாராக இருக்கவில்லை.

இதன் காரணமாக, தமிழ் மக்கள் பட்ட துன்பங்களை சிங்கள மக்கள் அறிய முடியாமல் போயிற்று.

இதனாலேயே ·இலங்கையில் பத்திரிகைப் பயங்கரவாதம் உளது என சர்வதேச தொண்டு நிறுவனமொன்று தனது ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆக, சம்பவங்கள் சரியாகவும் உண்மையாகவும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

அதிலும் தொடர்புடையவர்களை அது சேர வேண்டும்.

இப்போது கூட, செம்மணி மனிதப்புதைகுழி நம் மத்தியில் பேசுபடுபொருளாகியுள்ளது.

அதேநேரம் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சிங்கள மக்கள் எந்தளவு தூரம் அறிந்து வைத்துள்ளனர் என்பது தான் எழுப்பப்பட வேண்டிய கேள்வி.

உண்மை. செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தமிழ் மக்களாகிய நாம் அறிந்து கொள்கின்றோம். அதனால் அவலப்படுகின்றோம்.




ஆனால், செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் அங்கு மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள், செம்மணி மனிதப் புதைகுழி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலப் பகுதி, கிருஷாந்தி குமாரசாமி அவரது தாயார், சகோதரன், அயலவர் என்போர் கொல்லப்பட்ட சம்பவம், கிருஷாந்தி கொலை தொடர்பில் இராணுவ உத்தியோகத்தர் நீதிமன்றில் வழங்கிய சாட்சியம் என்பன தொடர்பில் சிங்கள மக்களுக்கு அறியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்யவில்லை. இங்கு தான் நம் தமிழ்த் தரப்புக்கள் தவறிழைக்கின்றன.

உண்மையில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் பற்றி அறியும் பொருட்டு சிங்கள ஊடகவியலாளர்களை நாம் இங்கு அழைத்து செம்மணிப் பகுதிக்கு அவர்களைக் கூட்டிச் சென்றிருக்க வேண்டும்.

உண்மை நிலையை அவர்களுக்கு எடுத்துரைத்திருக்க வேண்டும்.

காணாமல் போனவர்களின் உறவுகள் சிங்கள ஊடகவியலாளர்களைச் சந்திக்க வேண்டும். அவ்வாறான சந்திப்புகளையும் செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்ப்பதற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதன் மூலம் உண்மை நிலையை சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்த முடியும்.

இதன் மூலம் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய சிங்கள மக்களை ஒன்று திரட்டலாம்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோசம் தெற்கில் இருந்து எழுமாயின் அது வலிமையுடையதாக இருக்கும்.

இதை நாம் கூறும் போது, செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் நாங்கள் போராட்டம் நடத்தியுள்ளோம்.

கொழும்பிலும் போராட்டம் செய்துள்ளோம் என்பதே பதிலாக இருக்குமாயின், அது ஏற்புடையதன்று.



இங்கு போராட்டம் என்பது வேறு,சம்பவத்தை தெரியப்படுத்தி அதைப் பரப்புவதென்பது வேறு. எங்களைப் பொறுத்த வரை நாங்கள் போராடுகின்றோம்.

அந்தப் போராட்டத்தோடு எங்கள் கடமை முடிந்து விட்டதாக நினைக்கின்றோம். இங்கு தான் நாம் தவறிழைக்கின்றோம்.

ஆம், போராட்டம் ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான தகவல்கள் சிங்கள மக்களையும் உலக நாடுகளையும் நோக்கிப் பரப்பப்பட வேண்டும்.

அப்போது தான் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பகிரங்கப்படுத்தப்படும். மாறாக, இத்தகைய பிரசாரங்களை தென்பகுதி மக்கள் மத்தியில் செய்யாமல், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு கொழும்பில் நாம் ஆர்ப்பாட்டம் நடத்தும் போது, அது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்வினையாற்றுகின்ற சந்தர்ப்பங்களைத் தோற்றுவிக்கலாம்.

சில வேளைகளில் அந்த ஆர்ப்பாட்டங்கள் சிங்கள மக்களை வெறுப்படையவும் செய்யும்.

ஆனால் செம்மணி மனிதப் புதைகுழி, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தின் அடையாளம் என்பது ஏலவே சிங்கள மக்களைச் சென்றடைந்திருந்தால், கொழும்பில் நடத்தப்படும் போராட்டம் நியாயமானது என்பதை அவர்களும் ஏற்றுக் கொள்வர்.

ஆக, போராட்டங்கள் மட்டுமன்றி எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சக்தியாக சிங்கள மக்களை நாங்கள் ஆக்க வேண்டும்.

ஆம், முன்னைய அரச பயங்கரவாதம் எமக்கு இழைத்த அநியாயங்களுக்கு எதிராக சிங்கள மக்களையும் திரட்டுவது மிகவும் அவசியமானது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது மிகவும் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு


நடராசா சிவபாலகணேசன்


தம்பிப்பிள்ளை மணிசுந்தரம்


திருமதி.ஞானமணி செல்லையா


சண்முகரெட்ணம் பிரணவநாதன்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இந்த மண்ணில சமய, சமூக சேவைகளை வழங்கி நிறைவான வாழ்வு வாழ்ந்து நம்மை விட்டு அண்மையில் பிரிந்து போனவர்கள் பலர்.

அவர்களில், சைவ சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்ற சைவ சித்தாந்த இரத்தினம், ஓய்வு பெற்ற தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்திய பிரதி முகாமையாளர் தவத்திரு வேலன் சுவாமிகளின் தந்தையார் நடராசா சிவபாலகணேசன் அவர்கள்,

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபரும் சிறந்த கரப்பந்தாட்ட வீரருமான தம்பிப்பிள்ளை மணிசுந்தரம் அவர்கள்,

ஒரு காலத்தில எங்கள் மண்ணில் இருந்து பரத நாட்டிய அரங்கேற்றங்களை நடத்தி, கலைத்துறைக்குப் பேருதவி புரிந்து தற்போது லண்டனில் வசித்து வரும் திருமதி ஞானமணி செல்லையா அவர்கள்,

மிகச்சிறந்த மிருதங்க வித்துவானும் சங்கீதபூசணம் சண்முகரெட்ணத்தின் மகனுமாகிய பிரணவநாதன் ஆகியோர் இயற்கை எய்தி விட்டனர்.

இவர்கள் நம் மண்ணிற்கு ஆற்றிய கலை, கலாசார, சமய, சமூக சேவையை நினைவு கூருவதுடன் இவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ் சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இர ண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக சிவஸ்ரீ அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் சிறப்புத் தரத்தைப் பெற்றுள்ள சிவஸ்ரீ அவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலாள ராக இருந்த போது, வலி வடக்கில இராணுவக் கட்டுப்பாட்டில இருந்த காணிகளை விடுவிப்பதில கடுமையாகப் பாடுபட்டு அதில வெற்றியும் கண்டவர்.

இதை விட, இராணுவக் கட்டுப்பாட்டில, வழிபாட்டிற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த கோவில்களில பொங்கல் செய்ய வேணும் எண்டு கேட்டு, அதற்கு அனுமதி பெற்று பொங்கலை நடத்தியதோடு, மெல்ல மெல்ல குறித்த கோயில்களுக்குச் சென்று வழிபடுவதற்கான சூழ் நிலையையும் ஏற்படுத்திய செயல் வீரன்.

அவர் இப்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உண்மையில எங்கட விவசாயம் என்பது படுபாதாளத்தில வீழ்ந்து கிடக்குது.

ஒரு காலத்தில விவசாயத்தால பொருளாதார உச்சம் பெற்ற எங்கட வடமாகாணம் இப்ப நொந்து கெட்டுக் கிடப்பதைப் பார்க்க வயிறு பற்றி எரியுது.

பெரும்பாலான விவசாய அமைப்புகள், கமத்தொழில் சேவை நிலையங்கள் ஏனோ தானோ எண்டு தான் இயங்குகின்றன.

மானிய உரப் பதிவு ஒண்டுதான் அங்க நடக்குது. அங்கயும் வறுமையின் வெளிப்பாடும் வேலைப்பளுவின் கடுமையோடும் கூடிய தோற்றத்தில விவசாயிகள் கூடுவர். அவர்களுக்கான மதிப்பு என்பது அங்கு மருந்துக்கும் இல்லை எனலாம்.

இதைவிட, மானிய உரத்திற்கான பதிவுக்கும் மானிய உரத்தைப் பெறுவதற்குமான காத்திருப்புச் சொல்லி மாளா.

அதிலும் மானிய உரத்திற்குப் பதியப்படாதவர்களின் அவலம் வேறு. மானிய உரத்திற்கான பதிவுகள் கூட முறையாக அறிவிக்கப்படுவதில்லை. கமக்கார அமைப்புக்களும் தமக்குத் தெரிந்தவர்களுக்குத் தகவலைத் தெரியப்படுத்திவிட்டு மௌனமாகி விடுவர்.

இதைவிட, நெல் விதைப்பில் ஏற்படுகின்ற இழப்புகள் ஈடுசெய்யப் படுவதில்லை. நட்ட ஈடு பெறுவதற்காக வழங்கப்படுகின்ற காப்புறுதி இழப்பீட்டுப் படிவங்கள் மிகவும் சொற்பமாகவே வழங்கப்படுகின்றன.

இதில படிவம் முடிந்து விட்டது என்பதுதான் நெல்விதைத்து பாதிப்படைந்தவருக்குக் கிடைக்கின்ற பதில்.

இதையும் கடந்து, செல்வாக்கின் அடிப்படையிலேயே குளங்கள் புனரமைக்கப்படுகின்றன. இதால சில கிராமங்களில் உள்ள குளங்கள் முப்பது நாற்பது வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை.

இதைவிட, புதிதாகக் குளங்கள் அமைக்கின்ற வேலைத்திட்டங்கள் வடமாகாணத்தில அறவே இல்லை எனலாம்.

இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றுள்ள சிவஸ்ரீ அவர்கள் எங்கள் விவசாயத்தில புரட்சி ஏற்படுத்த வேணும் என்பது தான் எங்களின் தாழ்மையான கோரிக்கை.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் நீண்ட உரையையாற்ற ஆலடி அமைதியாகியது. அமைதியைக் கலைக்க மூப்பர் முனைந்தார்.

**மூப்பர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் சரி. விவசாய அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றுள்ள சிவஸ்ரீ அவர்கள், எங்கட வடமாகாண கால்நடை வளர்ப்புத் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்த வேணும்.

இப்பயெல்லாம் பசும் பால் உற்பத்தி அதிகூடிய வருமானத்தைத் தரக்கூடியது. எனவே நல்லினப் பசுக்களை வளர்க்கின்ற முயற்சிகளை ஊக்குவிப்பதோட, எங்கட பிராந்தியத்தில இருக்கிற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில ஏக்கர் கணக்கில காணிகளை வழங்கி, மாடு வளர்ப்புத் திட்டத்தை அவர்கள் மூலம் நடைமுறைப்படுத்த வேணும்.


இவ்வாறு செய்வதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உயிர்ப்புள்ளதாக ஆக்க முடியும்.

இதற்காக இந்திய அரசு அல்லது ஏனைய வெளிநாடுகளின் உதவியைப் பெற்று நல்லினப் பசுக்களை இறக்குமதி செய்ய வேணும்.

பசும்பால் உற்பத்தியில நாங்கள் தன்னிறைவு பெறக் கூடிய வாய்ப்பு நிறையவே இருக்குது. இதற்காக மாடு வளர்ப்புத்திட்டத்தை ஊக்குவிப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் வடக்கு மாகாண கால் நடைத் திணைக்களம் கடுமையாகப் பாடுபட வேணும்.

இவ்வாறு மூப்பர் கூற, அதனை ஆலடி மாநாட்டில் உள்ளவர்கள் தாம் ஏற்றுக் கொள்வதை உறுதி செய்வதாகத் தலையசைத்தனர்.

கூடவே மூப்பரின் கருத்தைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## மாடு வளர்ப்புத் திட்டத்தில் ப.நோ.கூ.சங்கங்கள் ஈடுபட வேணும்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமன்யு

# இந்தியாவின் மாநிலமாகப் போகிறதா வடக்கு - கிழக்கு?









தெற்காசிய வல்லரசு யார் என்பதில் இந்தியா - சீனாவிடையே மிகப்பெரும் பனிப் போர் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பனிப்போரை மிகச் சாதுரியமாகப் பயன்படுத்தியது இலங்கை என்று கூறினால் மிகையாகாது.

ஆம், இலங்கை ஆட்சியாளர்கள் சீனாவைக் காட்டி இந்தியாவையும் இந்தியாவைக் காட்டி சீனாவையும் மிரட்டும் செயல் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

தெற்காசியாவில் வல்லரசாகத் திகழ வேண்டுமெனின் அதற்கு இலங்கை மிக முக்கிய நாடாக இருந்தது.

இலங்கையின் அமைவிடம் அவ்வாறு இருப்பதால் இலங்கை யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதோ அவரே கோலோச்சுவர் என்பது எழுதா விதியாகிவிட்டது.

இதன் காரணம் இலங்கைக்கு இந்தியா - சீனா ஆகிய நாடுகள் தொடர்ந்து போட்டி போட்டுக்கொண்டு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடனான போரில் அவர்களை அழிப்பதற்கு இந்தியாவையும் சீனாவையும் பெரிதாக நம்பியிருந்தது.

அந்த நம்பிக்கையை இவ்விரு நாடுகளும் சிறப்பாகச் செயற்படுத்தி முடித்திருந்ததாயினும், இந்தியா ஒருபடி மேலே சென்று உதவியது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

காரணம் இந்தியாவின், அப்போதைய காங்கிரஸ் ஆட்சியாளர்களின் பழிதீர்க்கும் படலம் என்றால் மிகையாகாது.

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியைக் கொன்றதற்கு பழிதீர்க்கக் காத்திருந்த சோனியா காந்தி அரசுக்கு இறுதி யுத்தம் தீனி போட்டது.

என்ன நடந்தாலும் நான் பார்த்துக்கொள்கிறேன் விடுதலைப் புலிகளை அழித்தொழி என இலங்கைக்கு உற்சாகமூட்ட இலங்கை ஆட்சியாளர்களோ ஒரு இன அழிப்பையே அரங்கேற்றி நிறைவுக்குக் கொண்டு வந்தனர் போரை.

விடுதலைப் புலிகளை அழிப்பதாய் மேற்கொள்ளப்பட்ட போரில் அப்பாவிப் பொதுமக்களே அதிகம் மாண்டு போயினர் என்ற உண்மை இந்திய அரசுக்குத் தெரிந்தாலும் அதை மறைத்து போரில் கொல்லப்பட்ட அனைவரும் பயங்கரவாதிகள் என முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போட்டனர் ஆட்சியாளர்கள்.

இந்தியாவின் காங்கிரஸ் ஆட்சியின் ஆதரவுடன் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டாலும் தமிழ் நாட்டில் ஈழப்போர் தொடர்பிலும் தமிழ் இன அழிப்பு தொடர்பிலும் பெரும் தீ மூண்டு கொண்டே இருந்தது.

அந்தத் தீ இன்றுவரை பற்றி எரிந்து கொண்டே இருப்பது தமிழக உறவுகள் எம் தொப்புள் கொடி உறவுகள் என்பதற்கான சான்றாய் விளங்குகின்றது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வல்லமை இருநாட்டு அரசுகளுக்கும் இருந்தபோதிலும் அவற்றை தடுக்காமல் இருப்பதற்குள் இருக்கும் பொருள், தமிழக ஈழத்தமிழர் உறவில் விரிசலை ஏற்படுத்தும் செயற்பாடே.

அண்மையில் ரவிகரன் எம்.பி "இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துங்கள் இல்லையேல் எமது மீனவர்களிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்" என்று கூறியதிலிருந்து: தமிழக ஈழத்தமிழர் உறவு பாதிப்பது தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

நிலை இவ்வாறு இருக்கையில் பேராசிரியர் தர்மரதன தேரர் அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்து இந்திய - இலங்கை உறவில் விரிசலை ஏற்படுத்துவதாய் இருக்கின்றது.

ஆம், தமிழர் பகுதியான வடக்கு - கிழக்கை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கு திரை மறைவில் சதி நடப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இவர் தர்மரதன தேரராக இந்தக் கருத்தைக் கூறியிருப்பின் அது சாதாரணமாக கடந்து போயிருக்கும். ஆனால் இவர் ஒரு பேராசிரியராக இருந்து கொண்டு மேற்குறித்த கருத்தைத் தெரிவித்திருந்தமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கச்சதீவுப் பிரச்சினை இந்தியாவுக்கு மிகப்பெரும் தலையிடியாக மாறியுள்ள நிலையில் பேராசிரியர் தர்மரதன தேரரின் கருத்து இந்தியாவைச் சினமடைய வைத்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து ஏதும் இருக்காது.

கச்சதீவை இந்தியா மீண்டும் கையகப்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழக மீனவர்களின் நலன் பாதுகாக்கப்படும். இல்லையேல் இலங்கை அரசுகள் இந்திய மீனவர்களை கைது செய்து கொண்டே இருக்கும்.

எனவே இந்திய அரசு கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்ராலின் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்.

இந்த நிலையிலேயே இந்தியாவுக்கு எதிராக மேற்குறித்த கருத்துக்கள் இலங்கையில் இருந்து எழுந்துள்ளதாயினும், அமைச்சர் பிமல் ரத்னாயக்க அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்து தமிழகத்தில் மேலும் கொதிநிலையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

இலங்கையில் மின்சாரக் கதிரை எனப் புதுக்கதை கூறிய ராஜபக்ஷக்களைப் போல தமிழக முதல்வர் ஸ்ராலின் கச்சதீவு விவகாரத்தைக் கையில் எடுத்திருக்கிறார். கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது. இது சர்வதேச சட்டங்களுக்கமைவானது என்று கூறியிருக்கிறார்.

தேரரின் கருத்தைத் தொடர்ந்து அமைச்சர் பிமல் கூறியிருப்பது இந்த விடயத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும். இங்குதான் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

இலங்கை இந்தியாவையும் சீனாவையும் மிகத் திறம்படக் கையாண்டு கொண்டிருக்கிறது. தவிர எல்லை தாண்டும் மீனவர் பிரச்சினையில் கவனம் செலுத்தத் தவறுகிறது. இது தமிழக - ஈழத்தமிழர் உறவில் விரிசலை ஏற்படுத்தும்.

இந்த விரிசல் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுக்கும் தமிழக உறவுகளை வெறுப்படையச் செய்யும். இதனூடே தமிழருக்கான ஆதரவு கணிசமாகக் குறையும்.

இதில் எந்த வழியில் பார்த்தாலும் இலங்கை ஆட்சியாளர்களுக்கே சலுகைகள் அதிகம் எனலாம்.

சீனா வடக்கு - கிழக்கில் கால் பதிப்பதை இந்தியா ஒருநாளும் விரும்பாது.

சீனா வடக்கு கிழக்கில் கால் பதிக்க எத்தனித்தால் இந்தியா நேரடித் தலையீடு செய்யும். அது வடக்கு - கிழக்கை இந்தியாவின் மாநிலமாக பிரகடனப்படுத்தும் செயல் என்று யாராவது கூறினால், அதை இந்தியா தனது நாட்டின் பாதுகாப்பு நலன் சார்ந்து சிந்தித்து முடிவெடுக்கும்.

இந்த விடயத்தில் ஈழத்தமிழர்கள் அடக்கி வாசிப்பதே மிகச் சிறந்த பலனைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை நான் தேம்புகிறேன்



சேடமிழுத்துச் செத்தொழிய இருக்கும்
தென்னை நான் தேம்புகிறேன்
கேட்கலையோ உம் செவியில்,
வாடி வதங்கி வதனமெலாம் கருகிப்
பார்த்திருக்கச் சாவு தின்னும் என்னுருவம்
படவில்லையோ நும் விழியில்
இன்பமுற இருந்த நானோ இப்போ
ஈடாடிப் போனேன் இங்கு
சங்கப் புலவனவன் என்னைத்
தெங்கு என்றழைத்துப் பெருமை செய்தான்
நீண்ட வரலாறு கொண்ட நான்
மீண்டும் திரும்பிடாத் திசையேகிறேன்
எத்தனை செய்தேன் மனிதா உனக்கு
இளநீர் தந்தேன் தாகம் தீர்த்தாய்
பதநீர் தந்தேன் பருகி மகிழ்ந்தாய்
கள்ளுத் தந்தேன் போதையானாய்
சொல்லை விளம்பி மேதையானாய்
சிரட்டை தந்தேன் கரியாக்கினாய்
கரியைக் காசாக்கினாய்
அள்ள அகப்பை செய்தாய்
அழகுப் பொருட்கள் செய்தாய்
குரும்பட்டி எடுத்தாய்
தேர்கட்டி இழுத்தாய்
கருப்பட்டி செய்தாய்
மருத்துவம் பார்த்தாய்
குருத்தோலை வெட்டித்
தோரணம் செய்தாய்
தேங்காய் எடுத்தாய்
கோவிலில் உடைந்தாய்
சமையல் செய்தாய்
எண்ணெய் எடுத்தாய்
தலைக்கும் வைத்தாய்
விளக்கும் எரித்தாய்
கட்டுமானப் பொருட்கள் செய்தாய்
வெட்டும் பதுங்கு குழிக்கும் போட்டாய்
ஓலையெடுத்தாய் வேலி அடைத்தாய்
கூரை வேய்ந்தாய்
குளிர் நிழல் எடுத்தாய்
விளக்குமாறு கால்த்துடைப்பம்
இளக்கயிறு தும்புத்தடி
பயிர் வளரப் பொச்சு உரம்
பச்சை ஓலையில் பன்னாங்கு
செய்து படலை தாண்டிச்
சுடலை அனுப்பல்
இன்னும் எத்தனை எத்தனை செய்தேன்
தூய இலங்கைத் திட்டத்தைத்
துரிதப்படுத்தும் பெருமக்களே
தென்னை என்னில் இருந்து
உங்கள் பணியைத் தொடங்குங்கள்
என்னை முதலில் தூய்மையாக்குங்கள்
வெள்ளை ஈ நோயைச்
சேய்மையாக்குங்கள்
இறந்த பின்னே ஈக்கள் மொய்க்கும்
இந்த மண்ணில் இன்று நானோ
ஈக்கள் மொய்த்தே
இறந்து போகிறேன்

**தி.சாந்தகுமார்.**

---

## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## கவிதைத் தடாகம்

---

# கலக்கும் கந்தர்...



கந்தரும் கைவிரல் ஐந்திலும்
கனதியாய் மோதிரம் மாட்டி
கந்தரும் துள்ளிக் குதித்தே
களிப்போடு சென்றார் நன்னாடு
க்ந்தரும் மீண்டார் ஊருக்கு
கைகளில் பட்டமும் கொண்டு
கந்தரும் கௌரவ கலாநிதியானார்
கைவிரல் மோதிரம் இன்றியே!



**கவிவேந்தர்**
**பொன்.சுகந்தன்**

---

# கடந்து செல்வோம்



எமது வாழ்வில் நடைபெறுகின்ற
மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுவோம்!
எவரிடமும் எதற்காகவும் போராடாமல்
இருப்போம்!! எவரிடமும்
எதற்காகவும் விவாதிக்காமல்
இருப்போம்!!! ஏனெனில்
நாம் வாழுவதும், வாழப்போவதும்
சிலகாலம்!!! நடப்பவை எதுவும்
நடக்கட்டும் என்று நாம்
அமைதியாகக் கடந்து செல்வோம்
வாழ்க்கையை!!!

**இளங்கோ. (கண்ணன்)**

---

# கவிதையின் கவிஞன்



மலையென உயர்ந்த என் உயிராம் தமிழில்
மலர்ந்து சலசலவென வழியும் அருவிபோல்
மக்களை நாட பாரெங்கும் பரந்து - அவர்
மனமாம் கடலில் சங்கமிப்பதே கவிதை

கவிதைக்குப் பொய்யழகு என்போர்
அதைப் படித்ததும் உருகிடல் நியாயமோ
உருக உருவாக்கப்பட்டது கவிதையோ
கவிஞன் உருகி உருவாக்கியதன்றோ கவிதை

கவிதை என்ற அழகிய தமிழ் வடிவை
கடமையாய்க் கருதி கண்ணாய்க் காத்து
கருத்துடன் காலம் கடப்பினும் தந்திடும்
கடவுளின் ஒரு வடிவம் கவிஞன் அன்றோ

கவிக்கு வடிவம் தரும்
சொற்களில் உணர்வு கலந்து
சொல்லுக்கு வடிவம் தரும்
பொழியினில் சுவை கலந்து
வாசகர் மனதில் இடம்பெற - ஓர்
வாஞ்சையான கவிஞனாய் நான்
வடிக்கும் இதுவே அமிர்தமாம் கவிதை

**ய.அனோஜா**
**16A, கடற்கரை வீதி, குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**

---

# காலம் எங்களை பிரசவிக்கிறது...



அன்று தாய் மடியில் பிறந்து
தமிழ் மடியில் வளர்ந்ததை தவிர
தவறென்று யாதும் செய்தறியோம்

சூழ்ந்த சிங்கள
இனவாத கரங்களுக்குள்
அகப்பட்டோம்...
அழுதோம்... கெஞ்சினோம்...
அதுகூட அவர்களுக்கு
பயமுறுத்தலாய் தானிருந்தது
காரணம் நாங்கள் தமிழர்கள்

கிரவல், தரவை
நிலப்பரப்பு ஆனபோதும்
அன்றே
“செம்மணி” என பெயர் பெற
தமிழன் சிந்திய
செங்குருதியும் புதைந்த
தமிழ் கண்மணிகள்
நாமும்தான் காரணமோ?
வரலாற்றவளே!

ஊருக்குள் தொலைந்து...
சொந்தங்களை இழந்து...
அனாதைப் பிணங்களாய்
மண்ணுக்குள் புதைந்தோம்...
ஆனாலும் இன்று தமிழரெலாம்
உறவுகளாய் உணர்வுகொள்ள
காலம் எங்களை
பிரசவிக்கிறது...

விடுதலை வேள்வியில்
நாமும் வித்துடலாயே
வீழ்ந்தோம்! விதைந்தோம்!
எங்களுக்கான நீதி
இனத்துக்கான வாழ்வாகட்டும்!
உயிர்கூடு தொலைத்து
என்புக்கூடாய் காலம்
எம்மை பிரசவித்தாலும்
இன்றும் நாம் தமிழர்களாயே!

**அப்பையா சிவதாஸ், (கொல்லங்கலட்டி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அபிவிருத்தி பற்றி பேசுகின்றனவா?






செம்மணிப் புதைகுழி விடயத்தில் எமக் கான நீதி கிடைக்குமா வியாசரே?

**செம்மணிப் புதைகுழி விடயத்தில் எமக் கான நீதி கிடைக்குமா வியாசரே?**

குமார்-யாழ்ப்பாணம்

நீதி என்பது இரண்டு வகைப்படும். ஒன்று மனித நீதி. மற்றையது இறைவன் நீதி.

மனித நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதிக்காய் நாம் இன்னும் இன்னும் எழு ந்து நிற்பதில் தவறேதும் இல்லை.

ஒருவேளை மனித நீதி கிடைக்காது போயினும் இறைவனின் நீதி நிச்சயம் கிடைத்தே தீரும்.

எழுதி வைத்துக் கொள்ளுங்கள், தமிழி னத்துக்கு இன்னலை இழைத்தவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்பதையும் அவர்களுக்கு இறைவ னின் தீர்ப்பு எவ்வாறிருக்கப் போகிறது என்பதையும்.

**மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தில் இவ்வளவு அமளி துமளி என்றால், தமிழீழத்தை எம்மிடம் தந்தால்?**

சுதன்-குப்பிழான்

அப்படி ஒரு அதிசயம் நடந்தால் சரியாக ஒரு மாதத்தில் ஆட்சியாளர் களை கூப்பிட்டு எம்மால் எம்மை ஆட்சி செய்ய முடியாது.

எமக்கு அடுத்தவர் கீழ் அடங்கி இருந்து பழகிவிட்டது.

இதைவிட, எதற்கும் குதற்கம் பேசி குழப்பம் விளைவிப்பது எம் அணுக்க ளிலேயே ஊறி விட்டது.

இந்தப் பழக்கங்களை எம்மால் மாற்ற முடியாது. ஆதலால் எங்களை நீங்களே அடக்கி ஆட்சி செய்யுங்கள் என நீங்கள் கேட்ட அந்த அதை ஆட்சியாளர்களிடமே கொடுத்து விடுவோம்.

**அன்பு மிகுந்த வியாசரே காதல் தொட ர்பில் மிகச் சிறந்த கருத்து ஒன்றைச் சொல்லுங்கள். எனக்கல்ல, என் நண்பனுக்காக?**

அன்பிலன் -வரணி

தம்பி அன்பிலன், காதல் என்பது கலர் சாயம் பூசிய கோழிக் குஞ்சு போல.

ஒன்றில் பருந்து தூக்கிச் சென்றுவிடும். அல்லது கீரி கடித்துக் குதறி விடும். அல்லது சாயம் வெளுத்துவிடும்.

தம்பி நீர் பருந்தா? கீரியா? சாயம் வெளுப்பா?

**வியாசர் அவர்களே உங்களைப் பொறுத்தவரை பணமா? பாசமா? பெரியது?**

மகாலட்சுமி-கொக்குவில்.

பணம் மனித வாழ்வைத் தீர்மானிக் கிறது. பாசம் மனித மகிழ்வைத் தீர்மா னிக்கிறது.

வீதியோரத்தில் ரம்புட்டான் விற்பவர், அன்றைய அவரின் முதல் 2000 ரூபா, விற்பனை 3000 ரூபா. இலாபம் 1000 ரூபா. அதில் அவர் மகிழ்வு காண்கிறார். இதனால் அவரின் குடும்பம் அன்பு நிறைந்த பூந்தோட்ட மாகிறது.

கோடிக்கணக்கில் கடன் வாங்கி முதல் போட்டவரின் நிலை, வியாபாரம் சரியாய் இல்லை. வட்டி நாளுக்கு நாள் குட்டி போடு கிறது. இந்த நிலையில் எப்படி குடும்பத்தில் மகிழ்வு ஏற்படும்.

இருப்பதைக் கொண்டு வாழ்ந்தால் பணம் பாசத்தை உண்டாக்கும். இல்லாததற்கு ஆசை ப்பட்டால் பாசத்தை பணம் விழுங்கி விடும்.


அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்


**வெளிநாட்டு வாழ்க்கை மிகவும் கொடு மையானது வியாசரே. இது தொடர்பில் தங்களின் கருத்து?**

சாரங்கன்-தும்பளை

தன்னிடம் இருந்த அத்தனை நகை களையும் வங்கியில் அடகு வைத்து வெளி நாடு போகும் ஒருவன், கஷ்டப்பட்டு நகை களை வங்கியிலிருந்து மீட்டு விடுகிறான்.

ஆனாலும் தன்னை மீட்கத் தெரியாமல் அல்லும் பகலும் கஷ்டப்படுகிறான் வெளிநாட்டில்.

**மாகாண சபைத்தேர்தலை நடத்தக் கூடிய சாத்தியம் ஏதும் உண்டா வியாசரே?**

நவீந்திரன்-கரவெட்டி

அடிபட்டு, மிதிபட்டு ஆளாளுக்குள் குரோதத்துடன் நடந்து கொள்வதற்கு ஏன் வடக்கு மாகாண சபைத் தேர்தல் வரை செல்ல வேண்டும்.

ஆம், பிரதேச சபை, மாகாண சபை என்பன எமக்கான ஆட்சியில் எம்மை நாமே ஆளும் முறை.

இந்த ஒப்பற்ற சிந்தனையை எம்மால் ஏற்க முடியாமல் ஆளாளுக்குள் அடிபட்டு அல்லல்படுகிறோமே.

இப்படி நாம் அடிபடுவதை விட, பெரும் பாண்மையினர் எம்மை ஆண்டு விட்டுப் போவது ஒரு பெரிய விடயம் இல்லையே.

எமக்குத்தான் (தமிழர்) அடுத்தவன் காலடியில் கிடப்பதற்கு அவ்வளவு பிரியமே.

**ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அபிவிருத்தி பற்றி பேசுகின்றனவா?**

சிவராஜ்-வதிரி

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் களில் பங்குபற்றுபவர்கள் ஆயிரம் பேர். அதில் பேசுபவர்கள் ஐந்து பேர் மட்டும் தான்.

இதை விட அதிகாரிகளை எழுப்பி வைத்து கேள்வி கேட்பது முகம் சுழிக்கும் வகையில் இருக்கிறது.

கேள்வி கேட்பவர்கள் பதில் சொல்லும் நிலையில் இருந்தால் எப்படி இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும்.

இவற்றிற்கு நடுவில் தேநீர் குடித்து, வடை சாப்பிட்டு விட்டு வெறும் பார்வை யாளர்களாய் இருந்துவிட்டு செல்லும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் நிலை மிகப் பரிதாபம்.

அநேகமாக இக் கூட்டங்களில் தனி யாள் அரங்கே அதிகம் அரங்கேறுகின்றன.

**வியாசருக்கு திருமணம் செய்து வைக்க லாம் என்று எனக்கொரு ஆசையுண்டு. இதற்கு உங்களின் பதில் என்ன?**

வல்வை பையன்-வடமராட்சி

செத்துப் போன குழிக்கு எதுக்கையா சிங்காரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: அன்பே ஆருயிரே
இசை: எம் ஏ. விஸ்வநாதன்
பாடியவர்: வாணி ஜெய்ராம்



மல்லிகை முல்லை பூப்பந்தல் மரகத மணிக்க பொன்னூஞ்சல்
மஞ்சள் வாழை மாமரங்கள்பச்சை மாவிலை தோரணங்கள்
எல்லாம் எதற்காக நமக்கு கல்யாணம் அதற்காக

மல்லிகை முல்லை பூப்பந்தல் மரகத மணிக்க பொன்னூஞ்சல்
மஞ்சள் வாழை மாமரங்கள் பச்சை மாவிலை தோரணங்கள்
எல்லாம் எதற்காக நமக்கு கல்யாணம் அதற்காக

மஞ்சள் நீரினில் காலையில் குளித்து
தென்றல் நீந்திடும் பூங்குழல் முடித்து
மஞ்சள் நீரினில் காலையில் குளித்து
தென்றல் நீந்திடும் பூங்குழல் முடித்து
பட்டு சேலையும் மெட்டியும் அணிந்து
பக்கம் தோழியர் துணை வர நடந்து
மந்திரம் சொல்லும் மேடையிலே
மங்கல வாத்தியம் முழங்கையிலே
அழகன் உங்கள் அருகினிலே
அமர்ந்திருப்பாள் இந்த மணமகளே
அமர்ந்திருப்பாள் இந்த மணமகளே
எல்லாம் எதற்காக
நமக்கு கல்யாணம் அதற்காக

மல்லிகை முல்லை பூப்பந்தல் மரகத மணிக்க பொன்னூஞ்சல்
மஞ்சள் வாழை மாமரங்கள் பச்சை மாவிலை தோரணங்கள்
எல்லாம் எதற்காக நமக்கு கல்யாணம் அதற்காக

அந்தி மாலையில் சாந்திமுகூர்த்தம்
அன்னத்தூயிலில் ஆனந்தக் கோலம்
அச்சம் நாணத்தில் நான் வரும் நேரம்
அன்பு நாடகம் ஆரம்பமாகும்
பள்ளியில் வாசல் கதவடைத்து
பஞ்சணை பைங்கிளி கையணைத்து
வெள்ளி முளைக்கும் வேளை வரை
சொல்லி முடிப்போம் காதல் கதை
சொல்லி முடிப்போம் காதல் கதை
எல்லாம் எதற்காக நமக்கு கல்யாணம் அதற்காக

மல்லிகை முல்லை பூப்பந்தல் மரகத மாணிக்க பொன்னூஞ்சல்
மஞ்சள் வாழை மாமரங்கள் பச்சை மாவிலைத் தோரணங்கள்
எல்லாம் எதற்காக நமக்கு கல்யாணம் அதற்காக

# கோடீஸ்வரியாய் வாழ்ந்து மறைந்த சரோஜாதேவி

## நினைவுகளைப் பகிரும் நடிகர் சிவகுமார்

ஒரு கதாநாயகி உச்சத்தில் இருக்கும் போது எம்.ஜி.ஆருடன் அல்லது சிவாஜியோடு அதிக படங்களில் நடிப்பதுதான் அப்போது வழக்கமாக இருந்தது. சரோஜாதேவி. மிகவும் சாமர்த்தியமாக பிற கதாநாயகர்களோடு கதை அம்சத்திற்காக நடித்தார். நடிகை சரோஜா தேவி, இப்பொழுது இல்லை. "என் தொழிலை மிகவும் நேசிச்சேன். எல்லாதரிடமும் மிகவும் அனபுடன் இருப்பேன், மரியாதை கொடுப்பேன். அதனால, எல்லாருக்குமே என்னை ரொம்பப் பிடிக்கும்.

கடவுளுடைய தயவால் நல்ல நல்ல கேரக்டர்களில் நடித்து பேரும் புகழும் கிடைத்தது. சினிமா இன்டஸ்ட்ரில இதுவரைக்கும் என் மேல ஒரு கெட்ட பெயர் கூட கிடையாது. இதுவே மிகப்பெரிய சாதனைதான். இதைவிட, வேறு என்ன சாதனை வேணும்?" என விகடனுக்கு சமீபத்தில் அளித்திருந்த பேட்டியில் அவர் கூறியிருந்தார். சரோஜாதேவி பற்றிய நினைவுகளை நடிகர் சிவகுமாரிடம் கேட்டறிந்தோம்.

"நானும் புஷ்பலதாவும் 'பணமா பாசமா" படத்தில் சரோஜாதேவியோடு சேர்ந்து நடித்தோம். ஆனால் அந்தக் காட்சியை வெட்டி எடுத்துவிட்டார்கள். கே.எஸ். கோபால கிருஷ்ணன் இயக்கிப் பெரும் வெற்றி அடைந்த படம். 'எலந்தப் பழம்" பாடல் அமைந்து, பெரும் திரளாக ஓடிய படம். நான் ஊரில் இருக்கும் போது அவர் நடித்த முதல் படமான 'தங்க மலை ரகசியத்தைப் பார்த்திருக்கிறேன். சின்ன அண்ணாமலை கதை வசனம் எழுதித் தயாரித்தார்.

சரோஜாதேவி முதன்முதலில் 1956 இல் 'கச்சதேவயானி" என்ற கன்னடப் படத்தில் அறிமுகமானார். அதை நம்ம ஊர் இயக்குநர் கே.சுப்பிரமணியம்தான் இயக்கினார். அங்கே தொடங்கிய பயணம் நிற்காமல் அவர் பார்த்துக் கொண்டார். தமிழில் சிவாஜியோடு 'தங்கமலை ரகசியம்" படத்தில் நடித்த பிறகு எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னனில் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமானார். அவர் நடித்த பகுதி கலரில் எடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு 'பாகப்பிரிவினையில் ஆரம்பித்து, தொடர்ந்தார். எம்.ஜி.ஆரோடு 26 படங்கள் நடித்தார். பெரிய இடத்துப் பெண், தெய்வத்தாய், படகோட்டி, பணக்கார குடும்பம், எங்க வீட்டுப் பிள்ளை, அன்பே வா, பறக்கும் பாவை, அரச கட்டளை மாதிரியான படங்கள் மிகவும் கவனம் பெற்றன. வெற்றியையும் தேடித் தந்தன. தமிழில் 86 படங்கள் நடித்ததில் எம்.ஜி. ஆரோடு 26 படங்களும், சிவாஜியுடன் 19 படங்களும், ஜெமினியோடு 22 படங்களும் அடக்கம்.

ஒரு கதாநாயகி உச்சத்தில் இருக்கும்போது எம்.ஜி.ஆருடன் அல்லது சிவாஜியோடு அதிக படங்களில் நடிப்பதுதான் அப்போது வழக்கமாக இருந்தது. சரோஜாதேவி ரொம்பவும் சாமர்த்தியமாக பிற கதாநாயகர்களோடு கதை அம்சத்திற்காக நடித்தார். நான் ஒரு ஓவியன் என்பதால் அந்த ரீதியில் பார்த்தால் வைஜெயந்திமாலாதான் இந்த நூறு ஆண்டுகளில் பார்த்த, சிற்பத்தில் இருப்பது போன்று இறைவனால் படைக்கப்பட்ட பெண். அதற்குப் பிறகு உடலமைப்பிலும், அழகிலும் அவருக்குப் பிறகு சரோஜாதேவிதான் அடுத்த நிலையில் வருகிறார்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி என எல்லா தமிழ் ஹீரோக்களுடனும் அவர் நடித்திருக்கிறார். டைரக்டர் ஸ்ரீதர் 'கல்யாணப்பரிசு" படத்தில் இயக்குநராக அறிமுகமானபோது அவர் படத்திலும் நடித்திருந்தார். அந்தச் சமயம் பெரும் வெற்றி பெற்ற படம். சிவாஜி, ஜெமினியோடு நடித்த இரும்புத்திரை, பாலும் பழமும், ஆலயமணி, பார்த்தால் பசி தீரும், இருவர் உள்ளம், குலமகள் ராதை, புதிய பறவை, பணமா பாசமா, தாமரை நெஞ்சம், குலவிளக்கு போன்ற படங்கள் தமிழ் மக்கள் மறப்பதற்கில்லை.

இங்கிருந்து தெலுங்குப் பக்கம் போய் என்.டி.ஆர், நாகேஸ்வரராவுடன் 27 படங்களில் பணிபுரிந்த அனுபவமும் அவரிடம் இருக்கிறது. இந்தியிலும் போய் 11 படங்களுக்கு மேல் அசோக்குமார், திலீப் குமார், ஷம்மி கபூர், சுனில்தத்தோடு நடித்தார். நடிப்பு வகையில் மொத்தமாக 170 படங்களில் நான்கு மொழிகளில் நடித்தவர். அவரைத் தவிர வேறொருவர் இல்லை என்பதை என் அனுபவத்தில் கணிக்கிறேன்.

படங்களில் நடிப்பதை நிறுத்திய பிறகு பெங்களூரில் போய் தங்கிக் கொண்டார். சில நடிகைகள் மாதிரி இறுதிக் காலத்தில் அவஸ்தை அடையாமல் பொருளாதாரத்தில் தளர்ந்துவிடாமல் கோடீஸ்வரி மாதிரியே கடைசி வரையிலும் வாழ்ந்து மறைந்தார். அவருடைய நினைவு தமிழ் மக்களிடமிருந்து நீங்காதிருக்கும்.'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் இறந்த பிறகு என்ன நடக்கும்? வாழ்வின் கடைசி 7 நிமிடங்கள்!



நாம் இறந்த பிறகு என்ன நடக்கும் என்று பலவிதமான சந்தேகங்களும், குழப்பங்களும் நம்மில் பலருக்கு இருக்கத்தான் செய்கிறது. அதற்கான ஆய்வுகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

அறிவியல்படி, மனிதனின் இறப்பை மூளை மற்றும் இதயத்தின் செயற்பாடு நிறுத்தத்தின் மூலம் கண்டறியலாம். ஆனால், ஆராய்ச்சியாளர்கள், மனிதனின் இறப்பிற்கு பின்பும் லாஸ்ட் பர்ஸ்ட் ஆப் பிரைன் ஆக்டிவிட்டி (Last burst of brain activity) என்று சொல்லக்கூடிய நரம்பியல் உந்துதல்கள் நடைபெறும் என்கிறார்கள்.

2023இல் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட எலக்ட்ரோ என்செபலோ கிராம் (EEG Electro encephalo gram) ஆய்வில், இதயம் வேலை செய்வதை நிறுத்துவதற்கு சற்று முன்னும் பின்னும், காமா அலைவுகள் என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட நரம்பியல் அலைகளில் மாற்றங்களைக் கண்டறிந்தனர்.

நாம் உயிர்ப்புடன் இருக்கும்போது நடைபெறும் நரம்பியல் செயற்பாடுகளைவிட, அதீத வேகத்துடன் இந்தச் செயற்பாடுகள் நிகழும் எனவும் அந்த ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர். காமா அலைவுகள் உட்பட பல்வேறு வகையான அலைவுகள், நம் வாழ்நாள் நினைவுகளுடன் தொடர்புடையது என்பதையும் கண்டறிந்தனர்.

இது மட்டும் அல்லாது, லை.்.ப் ரிவ்யூ பினாமினா (Life review phenomenon) என்று சொல்லக்கூடிய ஒரு நிகழ்வு, அதாவது நம் வாழ்நாளில் நடைபெற்ற இனிமையான நிகழ்வுகள், மறக்க முடியாத சந்தர்ப்பங்கள் அந்த நேரத்தில் ஒரு வெளிச்சம் போல் நினைவுகளில் வந்து செல்லுமாம்.

நினைவுகளாக நம்முடைய மூளை சேமித்து வைக்கிறது

இதனால்தான், கடந்த காலம் பற்றி யோசிக்கையில், நம் வாழ்க்கையில் நடந்த கவலை, அதிருப்தி, அழுகை போன்ற சம்பவங்களை நினைவுகூராமல் மகிழ்ச்சியான நிகழ்வுகளை அதிகமாக நம் மூளை நினைவுகூரும். உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், பள்ளி நாட்களைப் பற்றி யோசித்தால் டீச்சரிடம் அடி வாங்கியதை விட நண்பர்களுடன் சேர்ந்து அடித்த லூட்டிகள்தான் நம் எல்லோருடைய நினைவுக்கும் அதிகமாக வரும்.

இது சிந்திக்கும் திறனுடைய அனைத்து உயிர்களுக்கும் நிகழும். இந்த சேமித்து வைக்கப்பட்ட இனிமையான நிகழ்வுகள் நாம் இறந்த பிறகு சுமார் 7 நிமிடங்களுக்கு நம் நரம்பியல் செயற்பாடுகளின் மூலம் பின்னோட்டமாக நம் நினைவுகளில் வந்து செல்லும். இதைத்தான் தி லாஸ்ட் ஸ்வீட்டஸ்ட் 7 மினிட்ஸ் (The last sweetest 7 minutes) என்கிறார்கள்.

# ஆச்சி அறிவுரை



## மனித ஒழுக்கம் என்பது குடும்ப சமூகப் பின்னணி

**பேராண்டி...**

மாவை.நா.கஜேந்திரன்

ஒழுக்கம் எண்டுறது குடும்பச் சூழலிலை இருந்து வரவேணும். ஒரு பிள்ளையின்ர குடும்பம் ஒழுக்கமில்லாத தீய சிந்தனையுள்ள குடும்பமாக இருந்தால் அந்தக் குடும்ப சூழலிலை வளருற பிள்ளை அதே மனநிலையுள்ள பிள்ளையாத்தான் வளரும்.

இது எங்கட ஆக்களுக்குப் புரியிறதில்லை. நாங்கள் சின்னப்பிள்ளையா இருக்கேக்குள்ள பெரியாக்கள் கதைக்கிற இடத்தலை நிக்க ஏலாது.

அதிலும் எங்கட ஐயா சரியான கடுமையானவர். ஆரும் கதைக்கிற இடத்திலை தப்பித் தவறிக்கூட நிண்டால் "பெரியாக்களின்ர வாய் பாக்கிற பழக்கம் என்ன?" எண்டு கண்டிப்பார்.

தாயின்ர மூக்கை மகன் கடிச்ச கதை தெரியுமோ பேராண்டி.

சின்னப்பிள்ளை ஒண்டு பள்ளிக்கூடத்திலை பக்கத்திலை இருக்கிற ஒரு பிள்ளையின்ர ஊசியை களவு எடுத்துக்கொண்டு வந்து தாயிட்ட கொடுத்திருக்குது.

தாயும் அதை வாங்கி வைச்சிட்டா. அது எப்படி வந்தது எண்டு கேக்கேல்லை.

காலம் போகப் போக அவன் வளர்ந்து பெரியாள் ஆகிவிட்டான். அதோட அவனிட்ட களவுப் பழக்கமும் வளர்ந்திட்டுது.

ஒரு வீட்டிலை களவெடுத்திட்டான் எண்டு கையும் மெய்யுமா பிடிச்சு ஜெயிலிலை அடைச்சாச்சு.

ஒருநாள் தாய் அவனைப் பார்க்கப் போக ஜெயில் கம்பியாலை தாயைப் பிடிச்சு அவாவின்ர மூக்கைக் கடிச்சுத் துப்பிட்டான்.

அதுக்குப் பிறகு அவன் சொன்னான். "அண்டைக்கு ஊசி களவு எடுத்துக்கொண்டு வரேக்க" என்னைக் கண்டிச்சிருந்தால், இண்டைக்கு நான் இவ்வளவு பெரிய கள்ளனாக ஜெயிலுக்குள்ள இருந்திருக்க மாட்டன் எண்டு.

ஓம் பேராண்டி.

இப்ப வீட்டுக் குப்பையை றோட்டிலை கொட்டிட்டு வாவெண்டு பிள்ளைகளிட்டையே கொடுத்து விடுற சமூகமாப் போச்சு எங்கட சமூகம். வீதியிலை பம்பஸை நாய்கள் வைச்சுப் பிடுங்கிக் கொண்டிருக்கும்.

இதைப் பார்க்க ஒருபக்கம் கவலையும், மறுபக்கம் கோபமும் வரும்.

பேராண்டி, வீட்டிலை இருக்கிற வயது போன ஏலாத ஆக்கள் பாவிக்கிற பம்பஸ், சின்னப் பிள்ளைகளுக்கு கட்டின பம்பஸை கொண்டு வந்து வீதியிலை ஏறியினம் எண்டால்: நான் அடிச்சுச் சொல்லுவன் அவையின்ர குடும்பச் சூழல் பிழை எண்டு.

எங்கட அன்பானவை பாவிச்ச அந்த பம்பஸை நாய், பூனை கடித்துக் குதற மனம் குமுறாமல் இருக்கிறவை மனிசர் எண்டுற வகைப்படுத்தலுக்குள்ள வருவினமோ? ஏன் மிருகம் எண்டுற வகைப்படுத்தலுக்குள்ளகூட வரமாட்டினம்.

ஒழுக்கம், கட்டுப்பாடு எண்டுறது குடும்ப சமூகக் கட்டமைப்பில இருந்து வரவேணும். இல்லாட்டி தாயின்ர மூக்கைக் கடிச்சவன்ர நிலைதான் நமக்கும் வரும்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா டாக்டர் நெல்லிக்காய்!




நெல்லிக்காயின் புகழுக்குக் குறைவே இல்லை. "தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால். டாக்டரைத் தேடிப்போக வேண்டியது இல்லை" என்று சொல்வார்கள் ஆப்பிளுக்கு மாற்றாக தினம் ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டால் போதும். ஆப்பிளுக்கு நிகரான சத்துக்களைக் கொண்டது நெல்லிக்காய் ஒரு நெல்லிக்காய் மூன்று ஆப்பிள்களுக்குச் சமம்"

**01.** கொதிக்கும் இந்த வெயில் காலத்திற்கு, நெல்லிக்காய் ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். உடலுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும் குணமுடையது என்பதால் ஜலதோஷத்தை உண்டாக்கிவிடும் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் ஜலதோஷம் வராமல் நெல்லிக்காய் தடுக்கும். இது தவிர வைரஸ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும்.

**02.** திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களில் விற்றமின் சி இருக்கிறது. ஆனால், வேறு எந்தப் பழங்களிலும் இல்லாத அளவுக்கு நெல்லிக்காயில் விற்றமின் சி மிக அதிகம். ஒரு சின்ன நெல்லிக்காயில் 600 மில்லி கிராம் விற்றமின் சி இருக்கிறது.


**03.** தினமும் ஒரு நெல்லிக்காய் உண்டுவந்தால், சர்க்கரைக் குறைபாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம். அதிக உடல் பருமனால் கஷ்டப்படுகிறவர்கள் காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காய்ச் சாறுடன் இஞ்சிச்சாறு அருந்திவந்தால் தேவையற்ற எடை குறைந்து சிக்கென்ற தோற்றத்தைப் பெறலாம்.

**04.** நெல்லிக்காயைத் துவையல் செய்தும் சாப்பிடலாம். சீரகம், பூண்டு, சின்ன வெங்காயம் போன்றவற்றைச் சேர்த்து நெல்லிக்காயுடன் துவையல் செய்து சாப்பிட்டால், இரத்தத்தில் கொழுப்பின் அளவு சீராகும். கொழுப்பைக் கட்டுப்படுத்துவதால் இதய சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. கண்களுக்கு மிகவும் நல்லது.





# வாய் திறந்து பேசலாம்...!



**பேசும் போது வாயில் இருந்து ஏற்படும் துர்நாற்றம், பேசும் விடயத்தை மறந்து பேசுபவரை மதிப்பிழக்க வைக்கிறது. வாய்ச் சொற்களுக்கு எந்தப் பலனும் இல்லாது, துர்நாற்றம் மட்டுமே மற்றவர்கள் மனதில் நிற்கும் இந்தத் துயரம் நீங்குவதற்கு, உங்களுக்கான டிப்ஸ் இதோ...**

## வாய் துர்நாற்றம் ஏன்?

1. வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும் போது, வயிற்றில் உள்ள அமிலங்கள் வாயில் துர்நாற்றத்தை ஏற்படுத்தும். அசிடிட்டி, அல்சர், கல்லீரல் பிரச்சினை உள்ளவர்களுக்கு வாய் துர்நாற்றம் இருக்கக்கூடும்.
2. உடலில் நீர் வறட்சி ஏற்படும் போதும், நாக்கில் எச்சில் சுரக்காமல் இருக்கும் போதும் வாய் துர்நாற்றம் ஏற்படும்.
3. தொண்டையில் உள்ள டான்சில் சுரப்பி, சுரத்தலில் தடைகள் ஏற்பட்டாலும் வாய் துர்நாற்றம் ஏற்படும்.

## வாய் துர்நாற்றம் நீங்க...

1. மருத்துவர் பரிந்துரையுடன் மவுத் வாஷ் பயன்படுத்தி, துர்நாற்றத்தைப் போக்கலாம்.
2. பழைய முறையான வேப்பங்குச்சியை வைத்து பல் துலக்கலாம். பல் துலக்கும் போது, வெளிவரும் வேப்பங்குச்சியின் சாறு, ஈறுகளுக்கு நல்லது.
3. தினசரி காலையில் வெது வெதுப்பான நீருடன் உப்பு சேர்த்து, வாய் கொப்பளிக்க, வாய் துர்நாற்றம் நீங்கும்.
4. பல் சொத்தை உள்ள சமயங்களில் மட்டும் கிராம்பை மென்று வாயில் சிறிது நேரம் வைத்திருக்கலாம்.
5. அல்சர் உள்ளவர்கள், நான்கு டம்ளர் நீரைத் தொடர்ந்து பருகலாம். வயிற்றில் நீர் இருப்பதால், அமிலங்களின் தாக்கம் குறையும்.

## தவிர்க்க... தடுக்க!

1. காலை, இரவு என இருவேளைகளிலும் பல் துலக்க வேண்டும்.
2. பல் இடுக்குகளில் உள்ள உணவுப்பொருட்களை நீக்க, நூலை வைத்து சுத்தப்படுத்தும் ஃப்ளாசிங் (Flossing) முறையைப் பின்பற்றலாம்.
3. புளிப்பு மற்றும் கார உணவுப்பொருட்களை அதிக நேரம் வாயில் வைத்திருக்க வேண்டாம்.



# சமைப்போம் சுவைப்போம்



## உருளைக்கிழங்கு அல்வா

### தேவையானவை :

1. உருளைக்கிழங்கு – 2
2. சர்க்கரை – 4 டேபிள் ஸ்பூன்
3. நெய் – 3 டேபிள் ஸ்பூன்
4. முந்திரி – 6
5. திராட்சை – 5
6. பால் – கால் கப்
7. இனிப்பில்லாத கோவா – 2 டேபிள் ஸ்பூன்



### செய்முறை

உருளைக்கிழங்கைத் தோல் சீவி துருவி வைக்கவும். வாணலியில் சிறிதளவு நெய்விட்டு சூடானதும் முந்திரி, திராட்சை சேர்த்து வறுத்து தனியாக வைக்கவும். பிறகு மீண்டும் சிறிதளவு நெய்விட்டு சூடானதும் துருவிய உருளைக்கிழங்கு சேர்த்து நன்றாக வதக்கவும். பின்னர் காய்ச்சிய பால் சேர்த்து நன்கு கலந்து வேகவிடவும். பால் நன்கு சுண்டியதும் தீயைக் குறைத்து வைத்து, சர்க்கரை மற்றும் கோவாவை உதிர்த்து சேர்த்து நன்றாகக் கிளறவும். சேர்ந்து திரண்டு வரும் போது மீதமுள்ள நெய்யை ஊற்றி, வறுத்து வைத்துள்ள முந்திரி, திராட்சை சேர்த்து நன்கு கிளறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ-ல-கி-ன்

# நெரிசலான தீவு



ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஏரியான விக்டோரியா ஏரியின் கிழக்கு கரையில் அமைந்துள்ள மிகிங்கோ தீவு, உலகின் மிகச்சிறிய, நெரிசலான பகுதியாக அறியப்படுகிறது.

இந்தத்தீவு, கால்பந்து மைதானத்தின்பாதி அளவு கூட இல்லாத, வெறும் அரை ஏக்கர் பரப்பளவு மட்டுமே கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. உகாண்டா மற்றும் கென்யா எல்லையில் அமைந்துள்ள இந்தத் தீவு, சிறிய அளவு இருந்தபோதிலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்விடமாக உள்ளது.

மிகிங்கோ தீவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தத் தீவுக்கு அருகில் இருக்கும் நீரில் நைல் பெர்ச் (Nile Perch) மீன்கள் அதிகமாக இருப்பதால், கென்ய மற்றும் உகாண்டா மீனவர்களுக்கு இது முக்கிய மீன்பிடி மையமாக உள்ளது.

தீவில் நான்கு மதுக்கடைகள், ஒரு மருந்தகம் மற்றும் ஒரு சிறிய கடை இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. பாறைகள் நிறைந்த இந்தத் தீவில் தாவரங்களும் மிகவும் குறைவு என்று கூறப்படுகிறது.

**எப்படி பயணம் செய்யலாம்?**

மிகிங்கோ தீவை அவ்வளவு எளிதில் அடைய முடியாதாம். முதலில், கென்யாவின் தலைநகரான நைரோபிக்கு விமானத்தில் செல்ல வேண்டும்.

அங்கிருந்து, விக்டோரியா ஏரியின் கரையில் உள்ள கிசுமு நகரத்திற்கு ஆறு மணிநேர கார் பயணம் செய்ய வேண்டும். பின்னர், உள்ளூர் மோட்டார் படகில் இரண்டு மணி நேரம் பயணம் செய்து அந்தத் தீவை அடையலாம். இது சுற்றுலாப் பயணிகளுக்கு சற்று சவாலான அனுபவமாக இருக்கும்.

தீவை அடைந்தவுடன், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு காவலர்களை சந்தித்து, அனுமதி கட்டணம் செலுத்த வேண்டும். அந்தப் பகுதியில் கடற்கொள்ளை பிரச்சினை இருப்பதால் இவ்வாறு செய்ய வலியுறுத்துகின்றனர்.

**கென்யா - உகாண்டா எல்லை மோதல்**

மிகிங்கோ தீவு, கென்யா மற்றும் உகாண்டா இடையே ஒரு எல்லைப் பிரச்சினையின் மையமாக உள்ளது. 1991இல், கென்ய மீனவர்களான டால்மாஸ் டெம்போ மற்றும் ஜார்ஜ் கிபெபே இந்தத் தீவில் தாங்கள் தான் முதலில் குடியேறியவர்கள் எனக் கூறுகின்றனர்.

ஆனால், 2004இல் உகாண்டா மீனவர் ஜோசப் நசுபுகா தீவுக்கு வந்தபோது, அங்கு கைவிடப்பட்ட வீடு மட்டுமே இருந்ததாகக் கூறுகிறார்.

2004ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில், உகாண்டா கடல் காவல்துறை தீவில் கூடாரம் அமைத்து உகாண்டாக் கொடிகளை ஏற்றியதாக கென்ய அரசு கூறியது. 2009 பெப்ரவரியில், மிகிங்கோவில் வசிக்கும் கென்யர்கள் உகாண்டா அரசிடமிருந்து அனுமதிபெற வேண்டிய நிலை ஏற்பட்டது, இது இருநாடுகளுக்கு இடையே மோதலை உருவாக்கியது.

பின்னர், ஜுலை மாதத்தில், உகாண்டா அரசு தனது நிலைப்பாட்டை மாற்றியது. மிகிங்கோ தீவு கென்யாவுக்கு சொந்தம் என்றும், ஆனால் அதன் அருகிலுள்ள நீர் பெரும்பாலும் உகாண்டாவுக்கு சொந்தம் என்றும் கூறியது. இதனால், உகாண்டாக் கொடி இறக்கப்பட்டு, வாபஸ் பெறப்பட்டன.

MailOnline இன் கூற்றுப்படி, நைல் பெர்ச் மீன்களின் விலை சமீப ஆண்டுகளில் 50% உயர்ந்து, சர்வதேச சந்தைகளில் ஒரு கிலோவிற்கு $300 (இந்திய ரூபாயில் 25,823)ஆக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மிகிங்கோ தீவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தத் தீவுக்கு அருகில் இருக்கும் நீரில் நைல் பெர்ச் (Nile Perch) மீன்கள் அதிகமாக இருப்பதால், கென்ய மற்றும் உகாண்டா மீனவர்களுக்கு இது முக்கிய மீன்பிடி மையமாக உள்ளது.**

# தெளிவே என் சிந்தனையுள்... 19

உணவகம் ஒன்றிற்கு நெருப்புக்கோழி ஒன்றுடன் வந்த இளைஞன் ஒருவன் உணவருந்தி விட்டு பணம் கொடுப்பதற்கு கையை நீட்டியபடி பிரார்த்தனை செய்தான். பணம் அவன் கையில் வந்தது.

உணவக உரிமையாளர்கள் ஆச்சரியத்துடன் எவ்வாறு இப்படி முடிகிறது என்றார். அதற்கு அவன் சொன்னான், எனக்கு கடவுளின் விசேட சக்தி இருக்கிறது என்று.

ஓ... அப்படியா என்ற அவர் அதுசரி இதென்ன நெருப்புக்கோழி? இதை அழைத்துக்கொண்டு ஏன் திரிகிறீர்? என்றார்.

அதற்கு அந்த இளைஞன் தயங்கியபடி கூறினான். இது எனது மனைவி. எனது மனைவி எப்படி இருக்க வேண்டும் என கடவுளிடம் வேண்டினேன்.

அதாவது மெல்லிய, உயரமான, சிவந்த, நீண்ட கழுத்துடையவள் எனக்கு மனைவியாக வேண்டும் என்று கடவுளிடம் கேட்டேன். அவர் இதை (நெருப்புக்கோழி) எனக்குத் தந்துவிட்டார் என்றான்.

**அன்பானவர்களே!** எங்களுள் பலரின் நிலையும் இதுதான். பிள்ளையைப் பிடிக்க குரங்கு வந்தது போல தெளிவின்றிய பேச்சுக்கள், கிடைத்த பதவியை தவறாக செயற்படுத்தல் போன்றன தங்களைத் தாங்களே தாழ்மைப்படுத்துவதாய் அமைந்து விடுகிறது.

எமக்கு எது தரப்படுமோ அது நிச்சயம் தரப்படும். எமக்கு எது தரப்படாதோ அது நிச்சயம் தரப்படாது. இதுவே நூறு விகித உண்மை.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

64

## செங்கை ஆழியான்

"என்றும் கோட்டை முகாம் முற்றுகையைப் புலிகள் கைவிட்டால் புலிகளுடன் பேசத் தயார்" என்றும் அறிவித்தார் இத்தனைக்கும் விடுதலைப்புலிகள் "சுயநிர்ணய உரிமை. அரசியல் அதிகாரம் உடைய மாநில சுயாட்சியை மட்டுமே இனிப் பரிசோதிக்க முடியும் என்றும் மாகாண நிர்வாகத்தை ஏற்க முடியாது" என்றும் அறிவித்தனர்.

இவற்றிடையே யாழ் கோட்டை முற்றுகையும் கோட்டையைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளும் கோட்டை முற்றுகையிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளும் இருசாராராலும் மேற்கொள்ளப்பட்டன . யாழ் கோட்டைக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினருக்கும்.

அதற்குள் புகுந்து கொண்ட நூறு பொலிஸாருக்கும் உணவு பெரும் பிரச்சினையாக மாறியது, புலிகளின் பசீலன் 2000 குண்டின் தாக்குதலும் ஏனைய ஏவுகணைகளின் தாக்குதலும் ஏற்படுத்திய மரணங்களும் காயமடைந்தோரும் பெரும் பிரச்சனையாக உருவெடுத்தன. பயம், பீதி, போதிய உணவின்மை, போதிய ஆயுதங்களின்மை, மருந்துகளின்மை, உறக்கமின்மை கோட்டைக்குள் அகப்பட்டவர்களை வலியிழக்கச் செய்து வந்தன. அவர்களுக்குத் தேவையான உணவுப்பொதிகளை விமானங்களிலிருந்து போடுவதற்கு ஸ்ரீலங்கா அரசு முயன்றது. வானத்திலிருந்து குறிப்பிட்ட உயரத்திற்கு அப்பாலிருந்து இப்பொதிகளைப் போட வேண்டியிருந்தது. புலிகளின் கலிபர் தாக்குதலிற்குள்ளாகாத உயரத்தில் நின்றபடி பறந்தபடி உணவுப்பொதிகளையும் மருந்துப்பொதிகளையும் சில வேளைகளில் சன்னப் பொதிகளையும் இட நேர்ந்தது.

இடப்படுகின்ற பொதிகளில் சில கோட்டைக்கு வெளியில் விழுந்தன. சில கோட்டைக்குள் விழுந்தன தொலைத் தொடர்புக் கோபுரத்தின் உதவியுடன் இறுதி நாட்களில் விமானங்கள் உணவுப் பொதிகளை இலக்காக இட்டன. ஆனால் அதனைப்புரிந்துகொண்ட புலிகளின் தாக்குதலால் அத்தொலைத்தொடர்புக் கோபுரம் முற்றாகச் சரிந்து விழுந்தது. அதன் பின்னர் கோட்டைக்குள் உணவுப் பொதிகள்ள இடுவது சிரமமானதாக மாறியது.

உணவுப்பற்றாக் குறை ஏற்பட்டது. சிலகாலம் வெறும் சோறும் உப்பும் தான் அங்கிருந்தோருக்கு உணவாகக்கிடைத்தன. கோட்டைக்குள் புகுந்த 75 தமிழ்ப்பொலிசாரும் 25 முஸ்லீம் பொலிஸாரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பணிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாயினர் இப்பொலிஸாரே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காவலரண்களில் காவலிற்கு நிறுத்தப்பட்டனர். (தொடரும்)

# இனிப்பும் கசப்பும்




# கடற்புறா

"பலவர்மனுக்குத் தெரிந்தாலென்ன? அவர் மகளையே எனக்கு மணம் செய்விக்கப் போகிறார் அவரிடமிருந்து ரகசியமெதற்கு நமக்கு?"

இளையபல்லவனைத் தீய்த்து விடுபவன்போல் பார்த்தான் கண்டியத்தேவன். வஞ்சகனான பலவர்மனுக்கு மரக்கலத்தின் ரகசியத்தைக் காட்டுவது எத்தனை அபாயம் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. அதுவும் அத்தனை கொள்ளைக்காரர் முன்னிலையிலும் இரகசியத்தை விளக்கினால் அது இரகசியமாகுமா என்ற நினைப்பும் ஏற்படவே தேவன் கண்கள் நெருப்பைக் கக்கின.

அவன் சீற்றத்தைக் கண்ட இளையபல்லவன் மெல்ல நகைத்து விட்டுச் சொன்னான். "தேவரே! மனிதன் மனிதனை நம்ப வேண்டும். நம்பாவிட்டால் உலகம் வாழ்வது கஷ்டம்"

"நம்பத்தகாத மனிதர்களும் உண்டு வெளியிடக் கூடாத இரகசியங்களும் உண்டு என்றான் தேவன்.

"என் மாமன் நம்பத் தகுந்தவர் இதோ இருக்கும் எனது நண்பர்களும் நம்பத் தகுந்தவர்கள்" என்றான் இளையபல்லவன். இதைக் கேட்ட பலவர்மனுக்கும் சரி கொள்ளையருக்கும். சரி அவன் தங்களைப் பாராட்டுகிறானா அல்லது ஏளனம் செய்கிறானா என்பது புலப்படாததால் சற்று நேரம் ஏதும் பேசாமல் நின்றனர்.

இளையபல்லவன் அடுத்து இட்ட உத்தரவு அவர்களிடையே நம்பிக்கையை விளைவித்தது. "ஆகட்டும் தேவரே! இந்த மரக்கலம் என்ன செய்ய முடியும் என்பதை அவர்களுக்குக் காட்டும்" என்றான். அவன் குரலிலிருந்த கடுமையைக் கண்ட கண்டியத்தேவன் அதற்குமேல் ஏதும்பேசாமல் மரக்கலத்தின் மீதிருந்த மாலுமிகளை நோக்கி "எல்லோரும் அவரவர் இருப்பிடம் செல்லுங்கள் யந்திரங்கள் சுழலட்டும் என்று இரைந்து கூவினான்.

பலவர்மனையும் கொள்ளையரையும் பிரமிக்க வைக்கும் சம்பவங்கள் அடுத்த விநாடிகளில் நிகழ்ந்தன. மாலுமிகள் சிலர் திடுதிடு வென அந்தக் கடற்புறாவின் தளத்தில் ஓடுவது அனைவர் காதிலும் விழுந்தது.

"உம்! தள்ளுங்கள்! தள்ளுங்கள்!" என்று எச்சரித்துக்கொண்டே கண்டியத்தேவன் மரக்கலத்திலிருந்து பல அடிகள் பின்னுக்கு நகர்ந்தான். அவன் சைகையைத் தொடர்ந்து இளைய பல்லவனும் மற்றோரும் பின்னடைந்தனர். அடுத்த விநாடி கப்பல் தளத்திலிருந்து பெரும் மர உருளைகள் திருப்பப்பட்டதால் விபரீதமான பல சப்தங்கள் காதில் விழுந்தன. அந்தச் சப்தங்கள் காதில் விழுந்து கொண்டேயிருக்கையில் கடல்புறா தனது பெரும் இறகுகளை மெல்லத் தூக்கியது.

கடல் நீர்ப்பரப்பை நோக்கியிருந்த இறகு கரையில் நின்றவர் கண்களுக்குப் புலனாகாவிட்டாலும் கரைப் பக்கமிருந்த இறகு புலனானதால் அதைக் கண்டவர் பிரமித்தனர். பக்கப் பகுதியிலிருந்து பெரிதாக எழுந்த அந்த இறகு அங்கிருந்த அனைவருக்கும் பந்தலிடுவது போல் அவர்களின் தலைகளின் மீது பரந்து நின்றது.

திரும்பி அந்த இறகு மட்டும் திடீரெனக் கீழே இறக்கினால் தாங்கள் அனைவரும் அதன் இறகுக்கும் இறகு தாங்கியிருந்த பக்கப் பெரும் பலகைக்கும் இடையே அரைக்கப்படலாமென்பதைக் கொள்ளையரும் பலவர்மனும் புரிந்துகொண்டதன்றி இறகு விரிந்து எழுந்ததால் மேற்பகுதியில் தளமும் விரிந்துவிட்டதென்பதையும் அந்த இறகில் மட்டும் நூறு வீரர்களுக்கு மேல் நின்று சண்டையிடலாமென்றும் அறிந்து கொண்டார்கள். (தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா முகம் 10;

## கார்த்தி



**1.** கடவுள் நம்பிக்கை நிறைய உண்டு. வீட்டின் அருகில் இருக்கும் அகத்தியர் கோயிலுக்கு ஒரு படம் ஆரம்பிக்கும்போதும், வெளியாகும்போதும் செல்வது வழக்கம். இவை தவிர பெரி தாய் சென்டிமென்ட் எதுவும் கிடையாது.

**2.** இளையராஜாவின் இசையில் லயிப்பதை விரும்புவார். "படைப் பைத் தாண்டிய வசீக ரம் ராஜா சார் இசையில் இருக்கு!" எனச் சொல்லிக் கொண்டே இருப்பார். ராஜா வின் இசை வீட்டில் கசிகிறது என்றால் கார்த்தி வீட்டில் இருக்கிறார் என்று அர்த்தம். சலங்கை ஒலியின் "மௌன மான நேரம்" அடிக்கடி முணுமுணுக்கும் பெருவிருப்பப் பாடல்!

**3.** ரொம்பவும் பிடித்த கார் Defender. பிடித்த உணவு பிரியாணி. கடக ராசிக்காரர். ஆயில்ய நட்சத்திரம். பிறந்த நாள் மே 25.

**4.** சினிமாவில் நண்பர்கள் என்றால் விஷால், ஆர்யா, ரவி மோகன் மற்றும் கருணாஸ். "கடலோர கவிதைகள்" ராஜா இப்போது நடிகர் சங்க கட்டடப் பணிகளில் உதவிக் கொண்டிருப்பதால் நெருக்கம். கிரசன்ட் பொறியியல் கல்லூ ரியில் தன்னுடன் படித்த நண்பர்கள் அனைவருடனும் இப்போதும் நட்பைப் பேணுகிறார்.

**5.** சிவாஜியின் "பராசக்தி"க்குப் பிறகு ஒரு அறிமுக நடிக ருக்கு இவ்வளவு பெரிய ஓப்பனிங் அமைந்தது கார்த் திக்குத்தான். "பருத்திவீரா"னுக்கு அடுத்து தனக்குப் பிடித்த படங்களாக "காஷ்மோரா", "சிறுத்தை" மற்றும் "மெய்யழகன்" படங்களைச் சொல்வார்.

**6.** டென்னிஸ் மீது பெரும் ஆர்வம். குதிரையேற்றத்தில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் இறங்கி விடுவார். பொன்னியின் செல்வனில் குதிரை மீது கம்பீரமாக வலம் வந்ததன் இரகசியம் இதுதான்!

**7.** விவசாயத்தின் மீது மிகுந்த அக்கறை உண்டு. "உழவன் பவுண்டேஷன்" என்ற அறக்கட்டளையை ஆரம்பித்து விவசாயத்தைத் திறம்படக் கையாள்பவர்களுக்கும், ஆரா ய்ச்சி செய்பவர்களுக்கும் வருடா வருடம் விருதுகள் அளித் துப் பெருமிதம் கொள்கிறார்.

**8.** தங்கை பிருந்தா மீது கார்த்திக்கு அலாதியான பாசம். அவுட்டோர் ஷூட்டிங்கிலிருந்து வந்தால் முதல் வேலையாக தங்கையைப் பார்ப்பார். அப்பா சிவகுமாரின் சொற்பொ ழிவுகளுக்கு முதல் ரசிகர்களாக சூர்யாவும் கார்த்தியும் இருப்பார்கள். அப்பாவின் அறிவுரைகளை கவனமாகக் கேட்டு நடப்பார்.

**9.** நடிகர் சங்க கட்டடப் பணியை முடிப்பதில் தீவிரமாகப் பணியாற்றுகிறார். கார்த்தியின் கறாரும், ஒழுங்கும் மற்றவர் களை அரவணைக்கிற விதமும் எல்லோரையும் ஒன்று சேர்த் திருக்கிறது. வீட்டில் இருந்தால் காலையில் கட்டடத்திற்கு வந்து மேற்பார்வையிடுவதை வழக்கமாக்கி இருக்கிறார்.

**10.** மகன் கந்தன், மகள் உமையாள், மனைவி ரஞ்சனி மூவரையும் வருடத்திற்கு ஒருமுறையாவது வெளி நாட்டிற்கு அழைத்துச் சென்று, சினிமா பரபரப்பு எதுவும் இல்லாமல் குடும்பத்திற்காக மட்டும் நேரத்தைச் செல வழிப்பார்.

---



தமிழ்ப் படங்களில் இப்போது அதிகம் இடம்பெறாமல் இருக்கும் கீர்த்தி சுரேஷ், ஹிந்திப் படங்களில் கவனம் செலுத்திவருகிறார். அதற் காக கணவருடன் மும்பையில் முகா மிட்டு இருக்கிறார் என்கிறார்கள். ஸ்பெஷல் போட்டோ ஷூட்களும் செய்ய உள்ளாராம். ஏற்கெ னவே "பேபி ஜான்" என்ற படத் தில் நடித்திருக்கும் கீர்த்தி, இப்போது ரன்பீர் கபூருடன் ஜோடியாக ஒரு படத்தில் கமிட் ஆகவுள்ளார் என்று கூறப்படுகிறது.

---



விஜய் சேதுபதியின் "தலைவன் தலைவி" விரைவில் திரைக்கு வருகிறது. இதைத் தொடர்ந்து மிஷ்கின் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்த "ட்ரெயின்" ரிலீஸ் ஆகப்போகிறது. அடுத்தபடியாக பூரி ஜெகன்நாத் இயக்கத்தில் தெலுங்கு - தமிழில் வெளியாகவிருக்கும் ஒரு படத் திலும் கமிட் ஆகியிருக்கிறார். இந்தப் படத்தில் ஜோடியாக "வாத்தி" ஹீரோ யின் சம்யுக்தா மேனனும், வில்லியாக தபுவும் நடிக்கிறார்கள். ஹைதராபாத் தில் பரபரக்கிறது இதன் படப்பிடிப்பு.

---



உடல்நலக் குறைவிலிருந்து தேறி திரைப் படங்களில் நடிக்கத் தயாராகி விட்டார் மம்மூட்டி. மருத்துவர்கள் வெள்ளைக் கொடிகாட்டி விட்டதால், மோகன்லாலோடு வெகு நாட்களுக்குப் பிறகு நடிக்கும் "பேட்ரியாட்" ஷூட்டுக்கு ஆயத்தமாகி வருகிறார். இரண்டு பேரின் ரசிகர் களும் இணையத்தளத்தில் வாழ்த்து மழை பொழிந்து வருகிறார்கள்.

---



வெளியாகத் தயாராக இருக்கும் "ஃப்ரீடம்" படத்தில், இலங்கைத் தமிழ் பேசி நடித் திருக்கிறார் "ஜெய்பீம்" லிஜோமோல். தமி ழில் பேசி நடிக்கறது சிரமமானதுதான். ஆனாலும், தமிழில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதுகொடுத்த தைரியத்தில்தான், "ஃப்ரீடம்" படத்தில் இலங்கைத் தமி ழில் பேசி நடித்திருக்கிறேன். ஒவ் வொரு காட்சியிலும் இயக்குநர் திருத்திக் கொண்டே இருந்தார். அதனால்தான் எனக்கு "பாராட்டுகள் கிடைக்கிறது" எனப் பூரிக்கிறார் லிஜோமோல்.

---



"ஆளவந்தான்" படத்திற்குப் பிறகு, ஹிந்தியில் கவனம் செலுத்தி வந்த ரவீ ணா டாண்டன் தமிழில் முழுவீச்சில் கவனம் செலுத்த முடிவெடுத்து விட்டார். சூர்யாவின் 46ஆவது படத்தில் நடித்து வரும் அவர், இப்போது விஜய் ஆண்டனியின் "லாயர்" படத்திலும் கமிட் ஆகியிருக்கி றார். லிஜோமோல் நடித்த "ஜென்டில் வுமன்" பட இயக்கு நர் ஜோஷுவா சேதுரா மன் இயக்கும் இப்படத்தின் ஷூட்டிங் சென்னையில் நடந்து வருகிறது.

---



சிம்புவின் 50ஆவது படத்தை தேசிங்கு பெரியசாமி இயக்க, சிம்பு தயாரிப்பார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 49ஆவது படமாக வெற்றிமாறனுடன் படம் நடிக்கிறார் சிம்பு. தேசிங்குக்கு "குட் நைட்" மணிகண்டன் நடிப்பில் ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு தேடி வந்திருப்பது தெரிந் ததும் மகிழ்ந்திருக்கிறார் சிம்பு. "நானும் வெற்றி சார் படத்தை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். நீங்கள் அதைப் முடித்துவிட்டு வாருங்கள்!" என்று தேசிங்கிற்கு க்ரீன் சிக்னல் கொடுத்தி ருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பனையின் உன்னதமான சத்துணவுகளை நாம் உதாசீனப்படுத்துவது ஏன்?


எமது கலாசாரத்தின் அடையாளமாக வரட்சியை தாங்கும் தூணாக கற்பகதருவாக சித்தரிக்கப்படும் பனை மரங்கள் பாவம். எமது மத்தியில் தோன்றியதால் பல கஷ்டங்களையும், அவமதிப்புக்களையும் தாங்கி நிற்க வேணடிய நிலை காணப்படுகிறது.

இதே பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம் பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன் மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக்கூடிய மனம் படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும். கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும், நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும். ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

அதிகூடிய ஊட்டச்சத்துள்ள பானங்களில் ஒன்று நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. நுங்கு இனிப்பாக இருந்தாலும் நீரிழிவு உள்ளவர்கள்கூட உண்ண முடியும். இதிலே குருதி குளுக்கோசை அதிகப்படுத்தும் நொதியத்தை கட்டுப்படுத்தும் வலிமை இருக்கிறது. அத்துடன் நுங்கில் விற்றமின்கள், கனியுப்புக்கள், அன்ரி ஒக்சிடன்ஸ், நார்த்தன்மை என்பன அதிகம் காணப்படுவது நுங்கின் ஒரு சிறப்பம்சமாகும்.

எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம் பழங்கள்கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டிய தேவை இருக்கிறது.



புரதச்சத்து நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம் பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக்கொண்டிருக்கின்றன. இவற்றின் அதியுச்ச பயன்களைப் பெறுவதற்கு இன்னும் பல முயற்சிகள் எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பனம்பழங்களின் உலர்நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (B) கரோட்டினும் விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக் கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவையான பானங்கள் இன்னும் பல உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனாங்களிகளை இலகுவில் பிரித்தெடுத்து பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட்டு வருகின்றன. இவை இலகுபடுத்தப்பட்டு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத்தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம்பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர்நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்றமின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம் பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறி முறைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

நுங்கு, பனம்பழம், கருப்பட்டி, ஒடியல், புழுக்கொடியல் போன்ற பனையிலிருந்து பெறப்படும் உணவு வகைகள் மிகவும் ஆரோக்கிய மான உணவு வகைகளாக இருந்த பொழுதும் இவற்றின் மகத்துவம் உள்ளூர் மக்களுக்கும் உலக மக்களுக்கும் தெரியாமல் இருப்பது மிகவும் வேதனையான ஒரு விடயமாகும். இவற்றை மக்களுக்கு நல்லமுறையில் அறிமுகப்படுத்துவற்கு நாம் ஒருங்கினைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.


Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ். போதனா
வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டமூலம் வெகு விரைவில் நிறைவேற்றப்படும்

## கடற்றொழில் அமைச்சர் உறுதி



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்குரிய சட்டமூலம் வெகுவிரைவில் நிறைவேற்றப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கண்டி மற்றும் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகைகள் தவிர ஏனைய அனைத்து ஜனாதிபதி மாளிகைகளும் நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன்களுக்காக சிறந்த முதலீட்டு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் கூறினார்.

நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர், மக்கள் அமைப்புகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

அதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்கள் தப்பவே முடியாது. அதற்கமைய ஊழல்களில் ஈடுபட்ட மோசடியாளர்கள் தற்போது சட்டத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

நாம் சட்ட விவகாரத்தில் தலையிடவில்லை. சட்டம் தனக்குரிய வகையில் தனது கடமையை நிறைவேற்றும்.

அதேபோல மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம் கட்டம், கட்டமாக நிறைவேற்றுவோம். இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒரே இரவில் நிறைவேற்றி விட வேண்டும் என சிலர் நினைக்கின்றனர். அது தவறு.

அதேவேளை, வறுமையின் கோரப்பிடிக்குள் இருந்து மக்களை மீட்பதற்காக சமூக சக்தி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடே எமது இலக்கு.

அந்த சமூகமேம்பாட்டு திட்டத்தில் வறுமை நிச்சயம் ஒழிக்கப்படும்.

அதற்குரிய வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (8)

# மன்னார் பேசாலையில் வீடு கையளிக்கும் நிகழ்வு



(மன்னார்)

மன்னார் பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு மக்கள் நல்வாழ்வு மையத்தினால் அமைக்கப்பட்ட வீடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறக்கப்பட்டு உரிய பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் ஒரு குடும்பத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மையத்தின் 120 ஆவது வீடாக இந்த வீடு கையளிக்கப்பட்டது.

சுமார் 11 லட்சம் ரூபாய் நிதி பங்களிப்பில் மன் னார் பிரதேச செயலக பிரிவின் துள்ளு குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பேசாலை நூறு வீட்டு திட்டம் பகுதியில் ஒன்பது நபர்களைக் கொண்ட பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன்,பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய உதவி பங்கு தந்தை, மற்றும் பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,நிதி அனுசரணையாளர் (அவுஸ்திரேலியா) ஆகியோருடன் மக்கள் நல்வாழ்வு மையத்தின் உறுப்பினர்கள் மற்றும் மன்னார் இணைப்பாளர் குயின்ரஸ் ஷர்மிளா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓலைத்தொடுவாய் பகுதியிலும் 119 ஆவது குறித்த வீட்டு திட்டம் மன்னார் பிரதேச சபையின் செயலாளர் செல்வம் லுமினா பேரேராவினால் கையளிக்கப்பட்டது . (8-285)

# புகைத்தல், போதைப்பொருள் பாவனை கிளிநொச்சியில் விழிப்புணர்வு

(தருமபுரம்)

புற்றுநோயை ஏற்படுத்தும் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகளில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் ஈடுபட்டிருந்தனர்.

தலை மற்றும் கழுத்து புற்றுநோய் விழிப்பு நாளாக ஜூலை மாதம்27 ஆம்திகதி உலகளவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையொட்டி புகைத்தல், மதுபானம், மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகியவற்றின் விளைவுகள் குறித்து விளக்கும் சித்திரங்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய பேரூந்து நிலையத்தில் காட்சிப் படுத்தப்பட்டன.

பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் சுகாதாரபணிமனை உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கு விளக்கங்களையும் வழங்கியிருந்தனர். (8-316)

# இன்றைய இளம் சமூகத்திடம் துவிச்சக்கரவண்டி பாவனை குறைவு

## ஆளுநர் சுட்டிக்காட்டு

(தருமபுரம்)

இன்றைய காலத்தில் தங்கள் தேவைக்கு துவிச்சக்கர வண்டியைப் பயன்படுத்துபவர்களைவிட தேகாரோக்கியத்துக்காக பயன்படுத்துபவர்களே அதிகம். இன்றைய இளைய சமூகத்திடம் துவிச்சக்கர வண்டிப் பாவனையை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

பிரபல சைக்கிளோட்ட வீரர் அமரர் அகஸ்ரின் ஞாபகார்த்த மாபெரும் சைக்கிளோட்டப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு, வெளிநாட்டுச்சேவை உத்தியோகத்தர் அகஸ்ரின் கிறிஸ்ரி ரூபன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இப்போது ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் சில இடங்களில் பெற்றோர் குறிப்பாக தாய்மார் கூட்டமாக நிற்பார்கள். பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களில் விட்டு விட்டு அவர்களுக்காக காத்திருப்பார்கள். பிள்ளைகளை நடந்து செல்வதற்குகூட அனுமதிப்பது குறைவாக உள்ளது.

சைக்கிள் ஓட்டம் என்பதே



அருகிவரும் சூழலில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் வியப்பாகத் தான் பார்க்கப்படும். தனது தந்தையார் அகஸ்ரின் நினைவாக அவரது மகன் முன்னெடுக்கும் இத்தகைய போட்டிகள் எங்களுக்குத் தேவை. எங்கள் பிள்ளைகள் தங்களை வலிமையாக்கிக் கொள்ள சவால்களை எதிர்கொள்வதை தயார் படுத்திக்கொள்ள இவை அவசியம் என்றார். (8-316)

# தனியார் கல்வி நிலையத்தில் துவிச்சக்கரவண்டி திருட்டு

(அராலி)

யாழ்ப்பாணம் - நீராவியடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்று நேற்றுக்காலை திருடப்பட்டுள்ளது.

குறித்த கல்வி நிலையத்திற்கு கல்வி கற்க வந்த மாணவர் ஒருவருடைய துவிச்சக்கர வண்டியே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

வெளியே இருந்து வந்த நபர் ஒருவர் உள்ளே சென்று துவிச்சக்கர வண்டியை திருடிச் சென்ற காட்சி அங்கிருந்த சி.சி. டி.வி கமராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-104)

# பாடசாலை மாணவிகள் கர்ப்பமடைவது அதிகரிப்பு

(கொழும்பு)

சமீப காலமாக பாடசாலை மாணவிகளிடையே கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், பாடசாலை மாணவிகளின் கர்ப்ப வீதமும், பாடசாலை மாணவிகளாக இருக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவித்தார்.

இதற்குத் தீர்வாக, கல்வி அமைச்சுடன் இணைந்து, இளம் பருவப் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த சிறந்த புரிதலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

18 வயதுக்குட்பட்ட மாணவிகளின் கர்ப்பங்கள், அவர்களைப் பாதிக்கப்பட்டவர்களாக மாற்றுவதுடன், பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. இதனால், பெற்றோரின் கவனிப்பு இல்லாமல், எதிர்காலத்தில் சமூகத்தில் கைவிடப்பட்ட அல்லது அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் பிறப்பு ஏற்படுகிறது.

இதைத் தடுக்க அரசாங்கமாக நாங்கள் செயற்பட்டு வருகிறோம். கல்வி அமைச்சுடன் இணைந்து, இளம் பருவப் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த தெளிவான புரிதலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு, அதற்கான முழுப் பொறுப்பு ஒரு பெண்ணின் மீது மட்டும் விழுவதில்லை.

அனாதையாகவோ அல்லது கைவிடப்பட்டவர்களாகவோ சமூகத்தில் விடப்படும் குழந்தைகள், சமூக களங்கத்தையும் பாவத்தையும் சாபத்தையும் சுமக்க நேரிடுகிறது. எனவே, உறவு வைத்திருக்கலாம், ஆனால் பொறுப்பான குடும்ப உறவு இல்லாமல் குழந்தை பெறுவது சாத்தியமில்லை என்றால், கர்ப்பத்தைத் தடுக்க அறிவியல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். கரு உருவான பிறகு அதை அழிப்பது குற்றவியல் கொலையாகும்.

ஆகவே, குழந்தைகளை அனாதைகளாகவோ அல்லது சமூகத்தால் கைவிடப்பட்டவர்களாகவோ ஆக்காமல், பொறுப்புடன் செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் மகன் மு.க.முத்து காலமானார்



(சென்னை)

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்து காலமானார்.

உடல்நலக் குறைவால் அவர் காலமான தாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

சென்னை ஈஞ்சம்பாக்கத்திலுள்ள இல்லத்தில் அவரது உடலம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (நி)

# ஓகஸ்ட் வரை மூடப்படும் பாகிஸ்தான் வான்வெளி

(இஸ்லாமாபாத்)

இந்திய விமான நிறுவனங் களால் இயக்கப்படும் விமானங்க ளுக்கு பாகிஸ்தான் தனது வான் வெளியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிவரை மூடுவ தற்கு தீர்மானித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# தென் கொரியாவில் கனமழை நால்வர் உயிரிழப்பு

## 1,300 பேர் வெளியேற்றம்

(சியோல்)

தென் கொரியாவில் பெய்து வரும் கனமழையால் நான்கு பேர் உயிரி ழந்துள்ளதுடன், 1,300 இற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டு ள்ளனர். அதேநேரம், கன மழை தொடரும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் எச்சரித்துள் ளது.

வரலாறு காணாத மழைப் பொழிவானது வானிலை தொடர் பான பேரிடர் எச்சரிக்கையை தூண்டுவதற்கு வழிவகுத்துள் ளது.

நாட்டின் மேற்கு கடற்கரையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நகர மான சியோசனில் 12 மணி நேரத் தில் 400 மி.மீற்றருக்கும் அதிக மான மழை பெய்தது.

இது ஒரு நூற்றாண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய மழை வீழ்ச்சி என தென்கொரிய வானிலை ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

மண்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ள அபாயம் தொடர்ந்து அதி கமாக இருப்ப தால், ஆற்றங் கரைகள், மலைச் சரிவுகள் மற்றும் தாழ் நிலப் பகுதி களில் இருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் மக் களை வலியுறு த்தியுள்ளனர். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை,வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.

**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**

**(முன்பதிவு செய்து வரவும்)** (4826)



# திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு

**ஆடியபாதம் வீதிக்கு அருகாமையில், நல்ல நிலையில் இருக்கும் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. (Hotel மற்றும் நிறுவனம் நடத்துவதற்கும் உகந்த இடம்) 5 Rooms, 2 Halls, Kitchen, 4 Toilets, 4 Bath Rooms, 4 A.C Rooms, 4 Parking Places என்பவற்றைக் கொண்ட அமைதியான சூழல் என அறியத் தருகிறோம்.**

**தொடர்புகளுக்கு:**

**077 959 7158**

(4845)



# மணி விழா வாழ்த்துக்கள்




திருமதி. **தில்லைநாயகி முத்தமிழ்ச்செல்வன்**

[பயிற்றப்பட்ட கர்நாடக சங்கீதம் – தரம்-1 (SLTS-I)]

**சேவை விபரம்**

- வ/நொச்சிமோட்டை அ.த.க. பாடசாலை (1990.03.15 - 1991.06.03)
- வ/வெளிக்குளம் அ.த.க.பாடசாலை (1991.06.04 - 1991.06.19)
- வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை (1991.06.20 - 1991.10.13)
- வ/நொச்சிமோட்டை அ.த.க.பாடசாலை (1991.10.14 - 1992.05.04)
- வ/மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை (1992.05.05 - 1993.12.31)
- வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் (1994.01.01 - 1997.04.07)
- வ/ C.C.T.M.S (1997.04.08 - 1997.09.22)
- க/கதிரேசன் மத்திய கல்லூரி (1997.09.23-2014.05.06)
- யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (2014.05.07 - 20.07.2025)

(4841)

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிக்கழகம் யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -14, சிவன்கோவில் மேற்கு வீதி. ஆதன இல-22/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செல்லத்துரை செல்வநாயகம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், மானிப்பாய், நவாலி கிழக்கில் வசிக்கும் கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி அவர்கள் 2005.10.03 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 1061 ஆம் இலக்கத்தில் நிறை வேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனமானது தனது பிதா செல்லத்துரை செல்வநாயகம் 1971 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவில் வசித்த கந்தசாமி என்பவரிடம் கொள்வனவு செய்து மூலப்பிரதியும் வைத்திருந்தார் என்றும், 1990 ஆம் ஆண்டில் நாட்டில் நடந்த யுத்தம் காரணமாக உறுதியினை தவறவிட்டு கொழும்பு சென்றுவிட்டார் எனவும் பின்னர் எங்கு தேடியும் உறுதி கிடைக்கவில்லை என்றும் தனது பிதா கொழும்பில் வசிக்கும் பொழுது அவரது தங்கை மற்றும் கணவர் ஆகிய வைத்தியர் வைத்தியலிங்கம் ஜீவானந்தன் மனைவி ஜெயலக்ஷ்மி மறுநாமம் ரஞ்ஜி முன்னிலையில் தனக்கு வாய்மொழி மூலமாக அழியா நன்கொடையாக வழங்கியிருந்தார் எனவும் தனது பிதா 1997.09.21 இல் இயற்கை எய்துவிட்டார் என்றும், குறித்த இச்சாதனத்தில் ஜீவானந்தனும் மனைவி ஜெயலக்ஷ்மியும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள் ளார்கள் எனவும், 1996 ஆம் ஆண்டிலிருந்து தனது நன்கொடையும் சொந்தமும் ஆட்சியும் உரிமையும் ஆனது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, வெள்ளைச்சூரி தறை மறுபெயர் வைரவர் முன்தறை நிலப்பரப்பு ஒன்று குளி ஏழு தசம் நான்குஎட்டு (நி.ப.1 கு.7.48) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.P.தனராஜா அவர்களால் 2005.10.01 இல் 2834 ஆம் இலக்க நிலஅளவைப் படத்தில் காண்பிக்கப்பட்டி ருக்கும் துண்டு ஒன்று(து.1) ஆகிய நிலப்பரப்பு ஒன்று குளி ஏழு தசம் நான்கு எட்டு ஆகும்.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு – அருணாசலம் கோபால்சாமிக்குரிய ஆதனம்.

வடக்கு - அருணாசலம் கோபாலசாமிக்குரிய ஆதனமும், முத்துக்குமார் ஜெகதீசனுக்குரிய ஆதனமும்.

மேற்கு -முத்துக்குமார் ஜெகதீசனுக்குரிய ஆதனமும், ஜெகதீசன் சுஜீந்திரனுக்குரிய ஆதனமும்.

தெற்கு – பொதுப் பாதை.

இன்னும் இதனது தெற்கு எல்லையில் உள்ள பொதுப் பாதையூடாக தெற்கே சென்று பிரதான வீதியாகிய வெள்ளாந் தெரு எனும் வீதி வரையிலுமான போக்கு வரத்து செய்யும் பாதைப் பாவிப்புரித்தும் இது அடங்களும் இதைச் சேர்ந்த வைகளும். இதனது வரி மதிப்பு இலக்கம் முப்பத்தியிரண்டு(32), வெள்ளாந் தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் ஆகும்.

தற்போது கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண் ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா சிவானந்தராஜா மனைவி ஜெயபாரதி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், யாழ் மாநகர சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுடைய ஆசைகள் வளர வளர அவனுடைய தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்.
- பிளாட்டோ

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## உணவுக்காக உள்ளதையும் கொட்டும் கொடுமை காணீர்

வடக்கு மாகாண மாணவர்களின் கல்வியை வெளிநாட்டுப் பணம் சீரழிக்கின்றது என ஓய்வுநிலைப் பரீட்சை ஆணையாளர் ஜீவராணி புனிதா கருத்துரைத்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்த நிலையில், வடக்கு மாகாணம் கடைசி நிலையில் இருப்பது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் கூறிய கருத்துத் தொடர்பில் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆம், ஒரு காலத்தில் சிறுகச் சிறுகச் சேமித்து வாழ்ந்த எம் தமிழினம் இப்போது சேமிக்கும் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டது.

முன்பெல்லாம் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஒப்பிட்டுப் பேசுகின்றவர்கள்; சிங்கள மக்கள் அன்றாடம் உழைத்து அதை அன்றாடம் செலவழித்து விடுவார்கள். அவர்களிடம் சேமிக்கும் பழக்கம் அறவே இல்லை.

ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறல்ல. அவர்கள் தமது உழைப்பின் ஒரு பகுதியை சேமிப்பார்கள். இதற்காக அவர்கள் செலவுச் சிக்கனம் உடையவர்களாக இருப்பார்கள். கண்டபாட்டில் செலவழிக்க மாட்டார்கள். இதன் காரணமாக அவர்களை வறுமை வாட்டுவதில்லை.

தொழில் இழப்பு ஏற்பட்டால் கூட அவர்கள் தங்களிடம் உள்ள சேமிப்பைக் கொண்டு சீவியம் நடத்துவார்கள்.

இதையும் கடந்து, தமிழர்கள் கல்வியைத் தங்களின் உயிராக மதிப்பவர்கள். காணியை விற்றும் கல்வியைப் போதிப்பவர்கள் என்ற மதிப்புக்குரியவர்கள். ஆனால் இன்று நிலைமை வேறுவிதமாயிற்று.

இப்போது நம் மத்தியில் சேமிப்புப் பழக்கம் அறவே இல்லை எனலாம். வருமானம் இல்லாமல் செலவழிப்பது பற்றிய சிந்தனையே நம்மிடம் ஊடுருவியுள்ளது. அதிலும் உணவகங்களில் சாப்பாட்டுக்காக நம்மவர்கள் செலவு செய்வதைப் பார்க்கும் போது தலை சுற்றும். அந்தளவுக்கு கண்மண் தெரியாமல் ஹோட்டல்களில் விருந்துகள் நடக்கின்றன.

இதனை ஊக்குவிப்பதாக வடமாகாணத்தை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தை பன்னாட்டு உணவுக் கம்பனிகள் ஆக்கிரமித்துள்ளன.

அதே சமயம் எத்தனை பன்னாட்டு உணவு நிறுவனங்கள் இங்கு வந்தாலும் அங்கு நம்மவர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்து உணவருந்துகின்றனர் எனில், எமது பொருளாதாரம் எங்ஙனம் கைமாறிப் போகிறதென்பது உணர்தற்குரியது.

அதிலும் காங்கேசன்துறையில் படையினர் நடத்துகின்ற ஒரு விடுதியில் நம்மவர்கள் உணவுக்காகவும் தங்குமிடத்துக்காகவும் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவிடுகின்றனர் எனும்போது, எங்களின் பொருளாதாரமும் சாப்பாடுபோல விரைவில் சமிபாடடைந்து விடும் எனலாம்.

எனவே இதுவிடயத்தில் சமூக ஆர்வலர்கள் நம்மவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும்.

இல்லையேல் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஏதுமற்றவர்களாக நாம் நடுத்தெருவில் நிற்க வேண்டிவரும்.

# நாட்டில் இனப்பிரச்சினை தீராமல் பொருளாதாரம் வளர்ச்சியடையாது

## பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

நாட்டில் இனப்பிரச்சினை தீராமல் பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

76 வருடங்களாக நாட்டில் தீர்க்கப்படாமலுள்ள சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகள், அவர்களுக்கு நடைபெற்ற அநியாயங்கள், அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகள் தொடர்பாக இதுவரை எவராலும் பேசப்படவில்லை.

நாட்டிற்கு சிறந்த ஒரு வளர்ச்சி தேவையென்றால் முதலில் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று நிச்சயம் கிடைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வை மறந்து பொருளாதார ரீதியாக வளர்ச்சியை காண வேண்டும் என நினைப்பது வெறும் கனவாகவே இருக்கும்.

பல இன மக்கள் இந்த நாட்டில் வாழ்கின்றனர். அவர்களுடைய அபிலாசைகள், தேவைகள் என்பவற்றை நாம் பூர்த்தி செய்ய வேண்டும்.

அவர்களுடைய உரிமைக்கு நாம் மதிப்பு கொடுக்க வேண்டும்.

தேசிய கீதத்தில் சொல்லப்படும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற கருத்தை நடைமுறையில் கொண்டுவர வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். (ம-7)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிலையில் மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர முதல்வர், யாழ் மாநகர சபை ஆணையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எட்டப்பட்டது.

குறித்த தீர்மானங்களின் படி ஜூலை 27ஆம் திகதி நள்ளிரவில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டு ஆகஸ்ட் 24ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னர் நள்ளிரவே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ்.நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பைரதத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும் வாகனங்கள் அனைத்தும் செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதித் தடைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோல மாநகர சபையினால் வாகன அனுமதி அட்டை வழங்கப்படும். நிரந்தர தற்காலிக வியாபாரிகளுக்கு பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆலய வெளிவீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

உற்சவ காலங்களில் ஆலய சூழலில் பக்தி கீதங்களை மாத்திரமே ஒலிபரப்பு செய்யமுடியும். உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுளின் உருவப் படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்தல், வானூர்தியை பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வான வேடிக்கை நிகழ்வுகளைச் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உற்சவ காலங்களில் ஆலய வெளிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# கிளிநொச்சி கல்மடுநகர் மூலிகைக் கிராமத்திற்கு

## வடக்கு ஆளுநர் கள விஜயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் மாகாண மூலிகைக் கிராமத்திற்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று களவிஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

100 ஏக்கர் காணி கொண்ட குறித்த மூலிகைத் தோட்டத்தின் ஒரு பகுதி அண்மையில் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து ஆராயப்பட்டது.

மூலிகைத் தோட்டத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதிலுள்ள சவால்கள் அதற்கு ஏதுவான சாதக வழிவகைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் தோட்டத்தின் தற்போதைய நிலைமைகள், மூலிகை செய்கையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் நிலைமைகள் குறித்து துறைசார் அதிகாரிகள், விவசாயிகளுடன் வடக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார். (ம-7,316)

# மட்டக்களப்பில் அரச வங்கியில் 1 கோடி 10 இலட்சம் அபேஸ்

## பெண் முகாமையாளர் கைது

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு அரச வங்கி ஒன்றில் ஒரு கோடி 10 இலட்சத்தினை சூறையாடிய செங்கலடியில் வசிக்கும் 37 வயது பெண் முகாமையாளரை குற்றத்தடுப்புப் பிரிவினர் கடந்த 16ம் திகதி கைது செய்துள்ளனர்.

வங்கியில் வைப்பிலிட்ட பணத்துக்குரிய அரசாங்கத்திற்குரிய வருமான வரியையே இப்பெண் முகாமையாளர் சூறையாடியுள்ளதாக வர்த்தகக் குற்ற முறைப்பாடு திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டினை அடுத்தே மட்டக்களப்பில் உள்ள அரச வங்கியொன்றின் முகாமையாளர் கைது செய்யப்பட்டார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க குருவிட்ட அவர்களின் ஆலோசனைக்கிணங்கவே சந்தேக நபரை வர்த்தக குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




நமசிவாயம்
சிவபாலன்
(70 வருடம்)
அம்பிகா
டிஸ்பென்சரி
சாவகச்சேரி.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மருந்தகங்களில் 25 வருடங்களுக்கு மேலாக சேவை புரியும் மருந்தகங்களுக்கு எமது சங்கம் "அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம்" சார்பாக வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். மேலும் இவர்களது சேவை தொடர வாழ்த்துகிறோம்.




லிங்கநாதன் அகிலன்
வசந்தம் மருந்தகம்
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.




செல்வநாயகம் சிசில் டயோனியஸ்
சிற்றி பாமா
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.




எரிக் நியூமன் சிங்கராயர்
சிற்றி மெடிக்கல்ஸ்
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.



வேலும் மயிலும் குருபரன்
சூர்யா மருந்தகம்
அச்சுவேலி.



முருகேசு பத்மநாதன்
வெஸ்கோ மருந்தகம்
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.



நடராஜா முத்தழகன்
ஜோய்ஸ் மருந்தகம்
பண்டத்தரிப்பு.




ராமச்சந்திரன் விஜயலக்ஷ்மி
மெடிகெயர் மருந்தகம்
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.



குமாரசாமி ராம்குமார்
நியூ மெடி பிளஸ்
சங்கானை.



அன்னலிங்கம் சுகிர்தமலர்
சாந்த் மருந்தகம்
கொடிகாமம்.




அரியபுத்திரன் சண்முகரட்ணம்
மந்திகை மருந்தகம்
வைத்தியசாலை வீதி, மந்திகை.




சந்திரசேகரம் சந்திரமோகன்
அம்பிகா மருந்தகம்
இணுவில்.



செல்லத்துரை கிருஷ்ணசாமி
ஸ்ரீமுருகன் மருந்தகம்
பருத்தித்துறை.



நிற்சிங்கம் நிர்மலானந்தன்
சங்கானை மருந்தகம்
சங்கானை.



ராஜரத்தினம் ஸ்ரீகாந்தன்
காவேரி மருந்தகம்
கொக்குவில்.



விஜயரத்தினம் சிவன்சுதன்
ரட்ணம் மருந்தகம்
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.



செல்லத்துரை பாலசிங்கம்
ஸ்ரீமுருகன் மருந்தகம்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

வாழ்த்துவோர் : அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு

(4848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த...

விடம் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அசாத் மௌலானா உட்பட தேவையான நபர்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு இராஜதந்திர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

இதுவரையில் வெளிவராத பல தகவல்கள் விசாரணைகளில் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றின் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார்.

விசாரணைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சிலர் கைது செய்யப்படலாம். விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அது விரைவுபடுத்தப்பட்டு, நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை இடம்பெறும் என்றார். (ம-7)

## யாழைச்...

ணிடம் போலி கடவுச்சீட்டு, போலி ஏறும்தாள் (boarding pass) மற்றும் போலி குடிவரவு முத்திரை (immigration stamp) ஆகியன இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளம்பெண், டுபாய் வழியாக இத்தாலி பயணிக்கத் திட்டமிட்டு, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி குடிவரவு அதிகாரிகளை ஏமாற்ற முயன்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## அரசை...

சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி உரிய வகையில் நிறைவேற்றி வருகின்றார்.

அனைத்து உறுதிமொழிகளையும் 24 மணிநேரத்துக்குள் நிறைவேற்றி விட முடியாது. கட்டம் கட்டமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு மக்களுக்கு உள்ளது.

அரசின் பயணம் மிகச் சிறப்பாகவே சென்று கொண்டிருக்கின்றது. ஆனால், எதிரணிகள்தான் வங்குரோத்து அடைந்துள்ளன. இன்று பலமான எதிரணி என்று ஒன்றும் இல்லை என்றார். (ம-7)

## வகுப்பறையில்...

மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நிகழ்வில் உரையாற்றிய அவர், ஒரு வகுப்பறையில் 50-60 மாணவர்கள் இருந்தால் தரமான கல்வி வழங்க முடியாது எனக் கூறியுள்ளார்.

பாடத்திட்டம், ஆசிரியர்களின் தொழில்திறன், கல்வி நிர்வாக அமைப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் மாற்றங்களை கொண்டு வரும் திட்டமே இந்தக் கல்வி மறுசீரமைப்பாகும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## கொலையாளிகள்...

ஊடகம் ஒன்றுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்குமாறு கர்தினால் உட்பட கத்தோலிக்கத் திருச்சபை தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றது. எம்மிடம் மாத்திரமல்ல இதற்கு முன்னர் பதவியில் இருந்த அரசிடமும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் என்ன நடந்தது? குற்றத்தை மறைப்பதற்குச் செய்யக்கூடிய ஒரு வழிமுறையே அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்குவதாகும். இதற்கமைய கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த தன் பின்னர் சி.ஐ.டியில் இருந்த 600 இற்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கினார். அதேபோன்று அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்தனர். விளக்கமறியல் வைத்தனர். சாட்சியங்களைத் திரட்டும் திறமையான அதிகாரிகளுக்குப் பதிலாகத் திறமையற்ற அதிகாரிகளைப் பதவிகளுக்கு அமர்த்தினர் என்றார். (ம-7)

## கண்டியில்...

இரு பெண்களும் ஆண் ஒருவரும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## யுத்...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு யுத்தம் நடந்த மண். இந்த மண்ணில் எங்கு தோண்டினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பலர் மண்ணுக்குள்தான் புதைக்கப்பட்டார்கள். எனவே, அந்தப் புதைகுழிகள் யுத்தத்தின் பின்னர் வெளிக்கிளம்பும் போது பலரும் வெவ்வேறு விதமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைப் பெருமளவு நிதியை வீண்விரயம் செய்து அரசு அகழ்கின்றது. இது தேவையற்றது.

அந்தப் புதைகுழிக்குள் இருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்படுபவர்கள் உண்மையில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஏனெனில் யுத்தத்தில் மூன்று இனத்தவர்களும் உயிரிழந்தனர். எனவே, செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுவது மீண்டும் இன வன்முறைக்கே வழிவகுக்கும்" என்றார். (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 210/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 248/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 235/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg மல்லி (M) | - 356/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 865/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 899/= | |
| 1Kg கடலை | - 385/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| 400g விம் கட்டி | - 250/= | 265/= |

உங்கள் Happy Super Markert முன்றலில் நடைபெறும் Diamond Promotion இல் ரூ.1050 பெறுமதியான 400g டைமன்ட் பால்மா ஒன்றினை கொள்வனவு செய்து ரூ.60 பெறுமதியான 18g பால்மா பக்கற் இரண்டினை இலவசமாகப் பெற்றிடுங்கள்.

இன்று 20.07.2025 காலை 9 am மாலை 6 pm வரை




Save Rs.40 மற்றும் ஒரு கோப்பை மாதிரி பாலினையும் இலவசமாகச் சுவைத்திடுங்கள்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
0777 8080 30 (1345)



**மஹஜன சம்பத** — திகதி 2025.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 5895 — X 1 7 4 3 1 6

**அத சம்பத** — X 4 3 1 6 — சீட்டிழுப்பு இலக்கம் 0470 — National Lotteries Board

**சுப தவசக்** — திகதி 2025.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0611 — மகரம் 02 03 08 11

**தன நிதானய** — திகதி - 2025.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் - 1925 — S 06 08 26 68 S — Double Chance 85492

**மெகா பவர்** — திகதி 19/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2243 — C 03 05 15 27 47

**ஜய** — திகதி 2025.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0163 — A 7 4 0 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 4137 — சீட்டிழுப்பு திகதி 19.07.2025 — E 14 47 56 79 — E — தேசிய லொத்தர் சபை

**HANDAHANA** உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 1204 — மகரம் 05 06 21 42 மகரம் — 58918 — 29

உத்தியோகபூர்வ முடிவுகள் — **சுப்பிரி தன சம்பத** — 19.07.2025 — வெற்றி வாரம் 0603 — A 4 6 6 3 3 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.144.210.40 — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2869 — சீட்டிழுப்பு திகதி 2025.07.19 — தினம் சனிக்கிழமை — 42 46 60 73 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,477,866.40

**சனிதா** — திகதி 19.07.2025 — வெற்றி வாரம் 5030 — 23 24 53 54 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,098,837.20 — ரூ. 50,000/-

**சசிரி** — வெற்றி வாரம் 729 — சீட்டிழுப்பு திகதி 19.07.2025 — சனிக்கிழமை — 05 30 34 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4581 — சீட்டிழுப்பு திகதி 19.07.2025 — தினம் சனிக்கிழமை — 25 26 27 33 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

**லக்ன வாசனா** — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — H 20 02 13 14 48 — 2045 — 19.07.2025 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.583,269,131.40 — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி** ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் : 2695 — சீட்டிழுப்பு திகதி : 2025.07.19 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,557,157.60 — 02 16 29 62 I — ரூ.100,000/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோவிலில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 2 பரப்பு காணி, 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் ஏற்ற செம்மண் காணி

**077 129 8159**

(4836)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(1334)

**077 864 9878**

## 22 விற்பனைக்கு 22

1. நல்லூர் குறோஸ் வீதியில் 10 பரப்புக் காணியும்
2. நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 25 பரப்பும், 22 பரப்புக் காணியும்
3. யாழ். கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாவலர் றோட் முகப்புடன் 10 பரப்புக் காணியும்
4. யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
5. யாழ். மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 14 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும்
6. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 3 கடைகளும் விற்பனைக்கு உண்டு.

(C-3456)

**077 723 2535**

## வாகனங்கள் விற்பனைக்குண்டு



- TVS முச்சக்கரவண்டி
- Honda Dio மோட்டார் சைக்கிள்
- Hero Pleasure மோட்டார் சைக்கிள்

மேற்படி குறிப்பிட்ட அனைத்து வாகனங்களும் நல்ல நிலையில் உள்ளன.

நேரடியாக வாகனங்களைப் பார்வையிட்டு விலை மதிப்பீட்டைச் செய்து கொள்ளலாம். (price Quotation)

ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.

குடும்ப புனர்வாழ்வு நிலையம், 123, 1 ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

(011)2580166, (077)660 2140

(211)

பெற்றோர், மாணவர்களின் தெரிவு...

**A/L - 2027 கணக்கீடு**

Mr.BALAKAJEN தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

- ஆரம்ப தேர்ச்சியிலிருந்து கற்பிக்கப்படும்.
- புதிய அனுமதி வழங்கப்படும்.

KBK கந்தர்மடம் கொழும்புத்துறை online classes

**077 452 0043**

A/L 2025, A/L 2026புதிய அனுமதி வழங்கப்படுகின்றன.

(C-3435)

## நயினை அம்மன் திருமண சேவை

88, 89, 90 ம் ஆண்டு பிறந்த USA PR உடைய மணமகள்களுக்கு யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற மணமகள்கள் தேவை. பதிவுக் கட்டணம் இலவசம். டச்சு வீதி, கல்வியங்காடு.

WhatsApp

**076 050 3863, 076 311 9485**

(1344)

## வீடு வாடகைக்கு

ஸ்ரேசன் வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் இருந்து 150m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

(1340)

தொடர்புகளுக்கு :

**+94 77 11 55 909**

WhatsApp calls only:

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3950/- |
| 11-16 Kg | 2690/- |
| 21-27 Kg | 2490/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 2130/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## காணி விற்பனைக்கு

சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60,00000/=

(4769)

**076 428 4896**

## விற்பனைக்கு

குதிரை போட் 25 H.P Susiki 32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்) சிறு கழிவுடன் விற்பனைக்கு

(4835)

**077 357 3055**

வல்வெட்டித்துறை


LOLC ரன் சவி

நிதித்துறை ஜாம்பவான்
தங்கக்கடன்
Digitalமயம்
ஆகியது

இப்போது LOLC ரன்சவி
Quick top - up வசதியுடன்
உங்கள் எந்தவொரு
பரிவர்த்தனையையும்
Online செய்துகொள்ளுங்கள்



சகல வங்கி பரிவர்த்தனைகள்

சகல பில் கொடுப்பனவுகள்

சகல கடனட்டை கொடுப்பனவுகள்

சகல ஒன்லைன் கொடுப்பனவுகள்

QUICK TOPUP

i-pay உடன் LOLC ரன்சவி தங்கக்கடன் பரிவர்த்தனைகளை செய்துகொள்ளும் உங்களுக்கு ஒரு புதிய வாய்ப்பு

தங்கத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் பலனை அதே நாளில் அனுபவிக்கும் விதமாக இப்பொழுது ipay மூலம் LOLC ரன்சவி தங்கக்கடனை Top - up செய்து எங்கும் எந்த நேரத்திலும் வரிசைகள், இடையூறுகள் இல்லாமல், மேலதிக கட்டணமோ செலவோ இல்லாமல் கடன் தொகையை அதிகரித்திடுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 0115 880 400

Powered By iPay

www.lolcfinance.com

LOLC பினான்ஸ்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org